# வான்விளக்கு

மலர் 17 இதழ் 4 மே 2024 சித்திரை–வைகாசி


# தோரணமலைக்கு வந்தால் இத்தனை கிடைக்குமா?



வேண்டுதலுக்காக கோவிலுக்கு செல்வோர் பலர். சிலர் மன அமைதிக்காக செல்வதும் உண்டு. ஆனால் இவை இரண்டும் வேண்டுதல் தான். நேர்த்திகடன் எங்கெல்லாம் நடக்கிறதோ அக்கோவில் மக்களிடையே பிரபலமாகி –விடும். மன அமைதிக்காக எங்காவது சுற்றுலா செல்வதும் உண்டு. அதேபோல் உடற்பயிற்சிக்காக செல்ல வேண்டுமானால் கிராமப்புறங்களில் மைதானத்திற்கு செல்வார்கள். நகர்புறங்களில் ஜிம் போன்ற இடங்களுக்கு செல்வார்கள். அறிவு வளர்ச்சிக்கு நூல் நிலையம் செல்வார்கள். அல்லது வேலை வாய்ப்பு பயற்சி நிலையத்திற்கு செல்வார்கள். வெளியே செல்பவர்கள் வயிறு பசிக்காக உணவு விடுதிக்கு செல்ல வேண்டும்.

ஆனால் இத்தனை நன்மைகளையும் ஒருங்கே பெற வேண்டுமென்றால் அதற்கு ஒரே இடம் தோரணமலைதான். ஆம் இந்த கோவில் புராண சிறப்புகளையும் வரலாற்று சிறப்புகளையும் கொண்டது. மூலிகை நிறைந்த மலை என்பதால் இங்கு வந்தால் உடல் ஆரோக்கியம் மேம்படும். மேலும் வேண்டுதல் நிறைவேற பலர் வந்து வணங்கி செல்கிறார்கள். அதில் பலனும் கண்டு வருகிறார்கள். படித்து அறிவை பெற நூல் நிலையம் உள்ளது. அங்கே போட்டித்தேர்வுக்கான புத்தகங்கள் உள்ளன. மேலும் அவ்வப்போது அதற்கான பயிற்சியும் அளிக்கப்படுகிறது. உடற்பயிற்சிக்கான உபகரணங்களும் உள்ளன. மேலும் மலைமீது ஏறி முருகனை வழிபட்டால் இறை அருளோடு உடல்நலமும் பேணப்படுகிறது. இதற்கிடையே மதியம் வயிற்றுப்பசியை போக்க உணவும் வழங்கப்படுகிறது.

இப்போது கோடைகால கொண்டாட்டம் தொடங்கி உள்ளது. இதிலும் பக்தர்கள் கலந்துகொண்டு உற்சாகம் அடையலாம். _ ஆசிரியர்

# குருபகவான் அருள் பெற தோரணமலைக்கு வாருங்கள்

நவக்கிரகங்களில் ஒருவரான குருபகவான் ஒவ்வொரு ராசியிலும் சுமார் ஓராண்டு இருப்பார்.அவர் மே 1–ந் தேதி மேஷ ராசியில் இருந்து ரிஷப ராசிக்குசெல்கிறார். இந்த குருப்பெயர்ச்சி பலனை படித்தவர்கள் பரிகாரம் என்ன சொல்கிறது என்பதை காண முயல்வார்கள். குருபகவான் சாதகமற்ற இடத்தில் இருப்பவர்கள் குருபரிகாரம் செய்ய ஆசைப்படுவார்கள். அதே போல் குரு சாதக பலனை தந்தாலும் தடையின்றி பலன்கள் கிடைக்க வழிபாட்டை செய்வார்கள்.

குரு பரிகாரத்துக்கு பல வழிகள் இருந்தாலும் முக்கிய ஸ்தலங்களுக்கு சென்று வழிபடுவார்கள். பொதுவாக ஜோதிடர்கள் ஆலங்குடி, திருச்செந்தூர், பட்டமங்கலம், குருவித்துறை என்று பட்டியலிடுவார்கள். அதற்கான காரணங்களும் உண்டு.






அதேபோல் தோரணமலை குருபகவான் தலமாகவும் விளங்குகிறது. குரு பரிகாரத்திற்கு தட்சிணாமூர்த்தியை வணங்குவார்கள். அதற்கு என்ன காரணம் என்றால்... தட்சிணாமூர்த்தி குருவாய் இருந்து உபதேசம் செய்தார் என்பதற்காக.. அதேபோல் முருகப்பெருமானும் குருவாக நின்று சிவபெருமானுக்கு ஓம் என்ற மந்திரத்திற்கு விளக்க உபதேசம் செய்தார். இந்த உபதேசம் செய்த இடம் சுவாமி மலை. அந்த வகையில் முருகனை வழிபட்டால் குருவின் அருள் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

சிவபெருமானுக்கு காதில் முருகப்பெருமான் உபதேசம் செய்யும் போது தந்தையின் தோளில் நின்று சொல்வது போல் தெரியும்.

பொதுவான மலையை சிவபெருமானாக கருதுவார்கள். அந்த வகையில் தோரணமலையும் சிவரூபமாகத்தான் காட்சி தருகிறது. அந்த மலையில்தான் முருகப்பெருமான் குகையில் இருக்கிறார். அந்த பார்க்கும்போது சிவபெருமானின் தோளில் முருகப்பெருமான் இருப்பது போல் தோரணமலை காட்சி அளிக்கும். எனவே தோரணமலையை வலம் வந்து (கிரிவலம்) வந்து முருகனை வணங்கினால் குருவின் பரிகாரம் தானாக கிடைக்கும். மேலும் இங்கு நவக்கிரகம் உள்ளது. கோவிலின் பின்புறம் வியாழன்(குருபகவான்) உள்ளார். அவர்களை வணங்கினாலும் குருபலம் கிடைக்கும்.

மேலும் அகத்தியர் சீடர்களுக்கு பாடம் நடத்திய இடம் இது என்பதால் இங்கு குருவின் அருள் தானாக கிடைத்துவிடும். தோரணமலை என்பது யானை தோற்றத்தில் இருக்கும் மலை. குருவின் வாகனம் யானை. அந்த வகையிலும் குருவின் அருள் இந்த மலைக்கு உண்டு.

# இந்த மாதம் கிருத்திகை வழிபாடு



தோரணமலையில் மாதந்தோறும் கிருத்திகை நாளில் சந்தனகாப்பு அலங்காரம் செய்து சிறப்பு பூஜை நடத்தப் படுகிறது. கிருத்திகை நடத்திரம் உள்ள காலை 10 மணிக்கு அபிஷேகம் தொடங்கும். அபிஷேகம் முடிந்து தீபாராதனை நடைபெறும் 12–மணிக்குள் இந்த பூஜை முடிந்து விடும். இந்த மே மாதம் கிருத்திகை சிறப்பு அபிஷேகம் மற்றும் பூஜை 9–ந் தேதி அதாவது சித்திரை மாதம் 26ந் தேதி வியாழக் கிழமை வருகிறது. அன்றைய தினம் அபிஷேகத்திற்கு பால் உள்பட பல்வேறு அபிஷேகப் பொருட்களை பக்தர்கள் வழங்கலாம். காலையிலேயே அபிஷேக பொருளை வழங்க வேண்டும். அப்படி வழங்க விரும்பும் பக்தர்கள் கோவில் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

## தண்ணீர் மட்டும் குடித்து விரதம்



சித்திரை மாதம் அமாவாசைக்கு அடுத்து பவுர்ணமிக்கு பிறகு வரும் தேய்பிறை அஷ்டமியை வைசாக பகுள அஷ்டமி என்று அழைப்பார்கள். அன்றைய நாளில் பகலில் சிவனையும் மகாவிஷ்ணுவையும் வணங்க வேண்டும். அஷ்டமி இருக்கும் இரவில் பைரவரை வணங்க வேண்டும். இந்த அஷ்டமிக்கு சதாசிவ அஷ்டமி என்றும் பெயர் உண்டு. அன்று முழுவதும் தண்ணீர் மட்டும் குடித்து விரதம் இருந்து சிவபூஜை செய்யய வேண்டும். மறுநாள் காலையில்தான் உணவு சாப்பிட வேண்டும். இந்த விரதத்தை மேற்கொண்டால் பாவங்களில் இருந்து விடுபட்டு மோட்சம் அடையலாம். இந்த சிறப்புக்குரிய நாள் 30–5–2024 வியாழக்கிழமை அன்று வருகிறது. அன்றைய தினம் காலை 11.18



மணிக்கு அஷ்டமி தொடங்குகிறது. மாலையில் வழிபாடு நடத்தலாம். மறுநாள் 31–ந் தேதி காலையில் 8.58 மணி வரை அஷ்டமி உள்ளது. விரதம் இருப்பவர்கள் அதன்பின் உணவு உட்கொள்ளவது நல்லது.



## குருவுக்கு முல்லை மலர்


'குரு பார்க்க கோடி நன்மை' என்பதால் குருவின் அருளைப் பெற விரும்புபவர்கள், வியாழக்கிழமை விரதம் இருந்து முல்லைப்பூ மாலை அணிவித்து குருவை வழிபட்டு, சுண்டல் தானம் கொடுப்பது நல்லது.



# அதிசயம் வெளிப்பட்ட அதிசயம்

தோரணமலையில் தற்போது நடைபெறும் திருவிழாக்களில் தைப்பூசம் மகத்தானது. தை மாதம் பவுணர்மியுடன் இணைந்து வரும் இந்த நாளில் தோரணமலைக்கு பத்தர்கள் அலையலையாய் வந்த வண்ணம் இருப்பர். கிரிவலம் இதையொட்டித்தான் வரும்.

இப்படி இந்த விழா மகத்துவம் பெற்றதற்கு காரணம் அந்த விழாவின் கதாநாயகன்தான். அந்த கதாநாயகன் வேறுயாரும் அல்ல.. உற்சவமூர்த்திகள் தான். அந்த சாமி சிலைகள் வருவதற்கு கோவில் பரம்பரை அறங்காவலர் ஆ.செண்பகராமன் எப்படி முயற்சி மேற்கொண்டார் என்பதை கடந்த மாத பதிவில் கண்டு இருக்கலாம்.



அவரது வேண்டுகோளில்படி முருகப்பெருமான், வள்ளி–தெய்வனை ஆகியோரின் ஐம்பொன் சிலைகளை பாண்டிச்சேரி முதலாளி நக்கீரன் அவர்கள் தருவித்தார்கள்.

அந்த சிலைகளை சுவாமி மலையில் இருந்து தனி வாகனம் மூலம் நக்கீரன் கொண்டு வந்தார். அந்த புனித நாள் 29.11.2013.

அப்போது செண்பகராமன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அந்த புனித சிலைகளை வாகனத்தில் இருந்து கீழே கொண்டு வருவது யார்? விரதம் இருந்து உடலையும் மனதையும் தூய்மையாக வைத்து இருப்பவர்களின் கரங்களில் தோளில் பவனி வந்தால் நன்றாக இருக்குமே என்று எண்ணினார். அதற்கான பக்தர்களை தேடினார். அந்த நேரத்தில் ஐயப்பன் கோவிலுக்கு மாலைபோட்ட அன்பர்கள் அங்கே வந்தனர். அவர்களை அழைத்து அந்த புனிதப் பணியை செய்ய செண்பகராமன் கேட்டுக் கொண்டார். அவர்கள் மூலம்




சிலைகள் மூன்றும் வாகனத்தில் இருந்து கீழே இறக்கி விநாயகர் சன்னதிக்கு கொண்டு வரப்பட்டது.

இந்த நேரத்தில் வேத ஆகமங்களை அறிந்து வைத்திருந்த திருச்செந்தூர் கிருஷ்ணன் அவர்கள் அங்கே வந்திருந்தார்கள். அவர்கள் தலைமையில் உற்சவர்கள் மூவரும் மலைமீது பயணமானார்கள். மலையில் முருகன் சன்னதியில் வைத்து சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. பின்னர் அங்கிருந்து அடிவாரம் கொண்டு வரப்பட்டு விநாயகர் சன்னதியில் வைக்கப்பட்டனர்.

மலைமீது இந்த உற்சவர்களை வைத்தால் ஒவ்வொரு சிறப்பு பூஜைக்கும் கீழே கொண்டு வரவேண்டும். மேலும் மலையேற முடியாதவர்களால் உற்சவர்களை தரிசிக்க முடியாது. அதனால்தான் விநாயகர் சன்னதியிலேயே வைத்து தினமும் பூஜை செய்கிறார்கள். பக்தர்களும் விநாயகர் மற்றும் தம்பதி சகிதமாக இருக்கும் முருகப்பெருமானை வணங்கிச் செல்கிறார்கள்.

தமிழ்மாத கடைசி வெள்ளி அன்று உற்சவர்களுக்கு சிறப்பு அபிஷேகம் நடத்தப்படுகிறது. இதற்காக பக்தர்கள் மலைமீதுள்ள சுனையில் இருந்து தீர்த்தக்குடம் கொண்டு வந்து அதன்மூலம் அபிஷேகம் செய்கிறார்கள். இதற்காக உற்சவர்கள் சொக்கலால் கலையரங்கம் கொண்டுவரப் படுகிறார்கள். அங்கே சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு விவசாயம் செழிக்க வருண கலச பூஜை செய்யப்படுகிறது. மாலைவரை உற்சவர்கள் அங்கேயே பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். அதேபோல் தைப்பூசம் அன்று உற்சவர்களுக்கு திருக்கல்யாணம் கோலாகலமாக நடத்தப்படுகிறது. இந்த உற்சவத்திற்கான பொறுப்பையும் பாண்டிச்சேரி நக்கீரன் அவர்கள் ஏற்று வருகிறார்.



# அர்த்தநாரீசுவராக காட்சி கொடுத்த நாள்

பெண்ணுக்கு சம உரிமையை கொடுத்த முதல்வர் நம்மை படைத்த இறைவன்தான். ஆம் சிவபெருமான்தான் தன்னில் பாதியை பார்வதிக்கு கொடுத்து பெண்மைக்கு சம உரிமையை வழங்கினார். அதனால்தான் சிவபெருமானை உமையொரு பாகன் என்றும் அர்த்தநாரீசுவரர் என்றும் அழைக்கிறோம். இந்த அர்த்தநாரீசுவரர் காட்சிக்கு ஒரு புராண நிகழ்வு உண்டு.

பிருங்கி முனிவர் சிவபெருமான் மீது அதீத பக்தி கொண்டவர். அவர் சிவபெருமானைத்தவிர வேறு எந்த கடவுளையும் வணங்க மாட்டார். ஏன் அன்னை பார்வதி தேவியைக்கூட அவர் வணங்க மாட்டார். சிவலிங்கத்தை மட்டுமே வலம் வந்தார். இதனை கவனித்த பார்வதிதேவி முனிவரின் செயலை கண்டித்து சிவபெருமானிடம் கூறினார். பின்னர் தனது கணவருடன் சேர்ந்து இருந்தார். இதனால் பிருங்கி முனிவர் வண்டு உருவம் கொண்டு சிவபெருமானை மட்டும் வலம் வந்து வணங்கினார். பிருங்கி முனிவருக்கு பாடம் புகட்ட வேண்டும் என்று பார்வதிதேவி சிவபெருமானை கேட்டுக்கொண்டார். இதனால் சிவபெருமான் தன் உடலில் பாதியை சிவபெருமானுக்கு அளித்தார்.



அர்த்தநாரீசுவரர் கோலத்தில் இருந்ததால் பிருங்கி முனிவரால் சிவபெருமானை மட்டும் வணங்க முடியவில்லை.

அதன்பின்னரே பிருங்கி முனிவர் தவறை உணர்ந்து சிவபெருமானிடமும், பார்வதிதேவியிடமும் மன்னிப்பு கேட்டார். அன்று முதல் சிவனையும் பார்வதியையும் அவர் வணங்கினார்.

இப்படி அர்த்தநாரீசுவரராக காட்சி கொடுத்த நாள் சித்திரை மாதம் அமாவாசைக்கு பிறகு வரும் பவுர்ணமிநாள். இந்த ஆண்டு இந்த பவுர்ணமி 23-5-2024 அன்று



வியாழக்கிழமை வருகிறது. அன்றைய தினம் கணவன்–மனைவி இருவரும் விரதம் இருந்து மாலையில் அர்த்தநாரீசுவரரை வணங்க வேண்டும். வீட்டில் அர்த்தநாரீசுவரர் படத்தை வைத்தும் பூஜிக்கலாம். இல்லை என்றால் அருகில் உள்ள சிவன் கோவிலுக்கு சென்று வழிபடலாம். திருச்செங்கோடு மலையில் உள்ள அர்த்தநாரீசுவரர் கோவிலுக்கும் சென்று வரலாம்.

அன்றை தினம் விரதம் இருந்து வழிபாட்டால் கணவன்–மனைவி இடையே இருந்து வந்த கருத்துவேறுபாடு அகன்று ஒன்றுமை ஏற்படும். தம்பதியர் அன்னியோனியமாக வாழ்ந்து மகிழ்ச்சி அடைவர்.

இந்த பவுர்ணமி நாளில் சத்தியநாராயணா பூஜையும் செய்யலாம். அன்று இரவு முழு நிலவை பார்த்து அதன்பின்னர் இந்த பூஜையை நடத்த வேண்டும்.

# தாம்பத்தியம் சிறக்க சுக்கிர வழிபாடு

சுக்ரன் அருளைப் பெற விரும்புபவர்கள் வெள்ளிக் கிழமை விரதம் இருந்து, மாலை நேரத்தில் சிவாலயத்திற்குச் சென்று வெண் தாமரை பூ மாலை அணிவித்து லட்சுமி வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. அன்றைய தினம் அன்னதானம் செய்வது மிகவும் உகந்தது. மொச்சை தானம் செய்யலாம். இந்த வழிபாட்டின் மூலம் தாம்பத்தியம் சிறப்படையும்.



## வான்விளக்கில் உங்கள் படைப்பு

தோரணமலை முருகன் அருளால் நிறைவேறிய பலன்களை வான்விளக்கு இதழில் வெளியிட தயாராக உள்ளோம். அதை 9486469412 வாட்ஸ் அப் மூலம் அனுப்பி வையுங்கள்.

# தோரணமலையான் தந்த தொழில் வளர்ச்சி



தோரணமலையானை நம்பி வந்தவர்களை கைவிட மாட்டார் என்பதற்கு பலரது வாழ்க்கை சம்பவங்கள் எடுத்துக்காட்டாய் விளங்குகிறது. ஊர் விட்டு ஊர் சென்றாலும், நாடுவிட்டு நாடு சென்றாலும் தோரணமலை முருகனை வேண்டினால் வாழ்வில் முன்னேற்றம்தான்.

அப்படி தோரணமலை முருகனால் வாழ்வு வளம் பெற்றவர் த.சக்திவேல். தென்காசி மாவட்டம் சின்னநாடானூரைச் சேர்ந்த இவர் வேலை நிமித்தமாக சென்னை வந்தார். ஆரம்பத்தில் கெமிக்கல் விற்பனையில் ஈடுபட்டு வந்தார். கடுமையான உழைப்பு.. ஆனால் அதற்கேற்ற வருமானம் இல்லை... வாழ்க்கையில் முன்னேற துடிப்பவர்கள் ஒரு கூண்டுக்குள் அடைபட்டு இருக்க மாட்டார்கள்.

த.சக்திவேலும் அப்படித்தான். சென்னையில் பலர் வீடு இன்றி வாடகை வீட்டில் பல்வேறு இன்னலுக்கு இடையே வாழ்கிறார்கள் என்பது கண்கூடு. அவர்கள் வாழ்வில் ஒளி ஏற்றுவதன் மூலம் நாமும் முன்னேறலாம் என்று நினைத்தார். அதற்காக மாங்காடு பகுதியில் புதிய வீடுகள் கட்டினார். அதை விற்க முனைந்தபோது எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை.

இந்த நேரத்தில் அவருக்கு தோரணமலை முருகன் நினைவுக்கு வந்தார். சிறுவயதில் அக்கோவிலுக்கு



அடிக்கடி சென்று வந்த பக்தனை அவர் கைவிடுவாரா என்ன? முருகனை வேண்டினார். அவர் கட்டி வைத்த வீடுகள் விற்பனையாகின. அதைத் தொடர்ந்து வீடுகள் கட்டுவதும் விற்பனை செய்வதும் அவரது முழு நேர பணியானது. மக்களின் ரசனைக்கு ஏற்ப.. தேவைக்கு ஏற்ப அவர் வீடுகள் கட்டி விற்பனை செய்து வருகிறார்.

தன் முன்னேற்றத்திற்கு வழிகாட்டிய தோரணமலை முருகனை அவர் மறக்க மாட்டார். சொந்த ஊர் வரும்போதெல்லாம் தோரணமலைக்கு வந்து வழிபட தவற மாட்டார். அதேபோல் அங்கு நடைபெறும் அன்னதானத்திற்கும், திருப்பணிக்கும் உதவி செய்து வருகிறார். அவரது இந்த பணியை அறங்காவலராக இருந்த கே.ஆதிநாராயணன் அவர்கள் போற்றி பெருமைப்படுத்தினார். இப்போது பரம்பரை அறங்காவலராக இருக்கும் ஆ.செண்பகராமனும் உதவியை மறக்காமல் பாராட்டி வருகிறார்.

த.சக்திவேலின் வளர்ச்சிக்கு அவரது மனைவி சரஸ்வதியும் உறுதுணையாக இருக்கிறார்.

# புதன் கிரகம் பிறந்த நாளில் கிடைக்கும் பலன்கள்



சித்தரை மாதம் அமாவாசைக்கு பிறகு வரும் ஏகாதசி நாளில் நவக்கிரகங்களில் ஒருவரான புதன் பிறந்தார். புதனின் அருளைப்பெற விரும்புபவர்கள், கல்விஞானம் பெற விரும்புபவர்கள், புதன்கிழமை விரதம் இருந்து மகா விஷ்ணுவை வழிபட்டு வருவதுடன் சர்க்கரைப் பொங்கல் நைவேத்தியம் செய்வது மிகவும் சிறந்தது. பாசிப்பயிறு தானம் செய்வது நல்லது. மேலும் புதனுக்கு ஐந்து விளக்குகள் ஏற்றி மரிக்கொழுந்தால் அர்ச்சனை செய்ய வேண்டும். நரம்பு தளர்ச்சி உள்ளவர்கள். பித்தம் அதிகம் உள்ளவர்கள் இந்த புதன் வழிபாட்டை நடத்தினால் பூரண குணம் அடைவர். இந்த ஆண்டு புதன் ஜெயந்தி மே 19ந் தேதி அதாவது வைகாசி 6–ந் தேதி ஞாயிற்றுக்கிழமை வருகிறது.

அத்திரி முனிவரின் மனைவி அனுசூயா தேவி. கற்புக்கரசியான இவளை சோதனை செய்ய முப்பெரும் தேவியரும் முயன்றனர். தங்கள் கணவரிடம் அனுசூயா தேவியிடம் முனிவர் வேடத்தில் சென்று பிறந்தமேனியுடன் நின்று தங்களுக்கு அமுது படைக்க வேண்டும் என்று கேட்க வேண்டும் என்றனர்.

அதன்படி சிவபெருமான், மகாவிஷ்ணு, பிரம்மா ஆகிய மூவரும் முனிவர் வேடத்தில் அங்கு சென்று பிறந்த மேனியுடன் உணவுர பரிமாறவேண்டும் என்றனர். ரிஷிகளுக்கு உணவு படைப்பதையே



# மும்மூர்த்திகளின் அம்சமான தத்தாரேயர் பிறந்த நாள்

சிறப்பு பணியாக இருந்த அனுசூயாதேவிக்கு பெரும் குழப்பமாக இருந்தது. பின்னர் தன் கற்பின் மேன்மையால் மும்மூர்த்திகளையும் குழந்தைகளாக்கி அவர்களுக்கு பிறந்த மேனியுடன் உணவு ஊட்டினார்.

இதற்கிடையே கணவரை காணாது முப்பெரும் தேவியரும் அனுசூயா தேவி வீட்டுக்கு வந்தனர். அங்கே அவர்கள் குழந்தையாக இருந்தனர். அனுசூயா தேவியிடம் வேண்டி தங்கள் கணவரை மீட்டுச் சென்றனர்.

அப்போது அனுசூயாதேவி மும்மூர்த்திகளும் தனக்கு குழந்தையாக பிறக்க வேண்டும் என்ற வரம் கேட்டாள். அதன்படி மும்மூர்த்திகளும் ஒரு மூர்த்தியாக ஒரு குழந்தை பிறந்தது. அவர்தான் தத்தாரேயர். அவர் சிவன், விஷ்ணு, பிரம்மா என மூன்று முகத்துடன் காட்சி அளிப்பார்.

தத்தாரேயர் சித்திரை மாதம் அமாவாசைக்கு பிறகு வரும் பவுர்ணமியை அடுத்து வரும் தேய்பிறை தசமி நாள் பிறந்தார். அந்த பிறந்த நாள் 1-6-2024 அன்று சனிக்கிழமை வருகிறது. அன்று தத்தாரேயரை வணங்கினால் மும்மூர்த்திகளை வணங்கிய பலன் கிடைக்கும்.



# முருகப்பெருமானின் அருளால் வளர்ந்த வள்ளியம்மாள்புரம் திருமுருகன் பள்ளி

நெல்லை மாவட்டம் கடையம் பஞ்சாயத்து யூனியனில் உள்ள ஊர்தான் வள்ளியம்மாள்புரம். இந்த குக்கிராமத்தின் பெயரை சொன்னவுடன் நமது நினைவுக்கு வருவது அங்குள்ள திருமுருகன் பள்ளிக்கூடம் தான். சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பே திருநெல்வேலி மாவட்டத்தில் பெயர்பெற்ற பள்ளிக்கூடமாக விளங்கியது. பல்வேறு ஊர்களில் உள்ளவர்கள் தங்கள் பிள்ளைகளை இங்கு கொண்டு வந்து சேர்த்தனர். அவர்களுக்காக இங்கு மாணவர் விடுதியும் அப்போதே ஆரம்பிக்கப்பட்டது. விடுதியின் கட்டுப்பாடு– ஒழுங்கு, சிறப்பு போன்றவை பெற்றோர்களை மிகவும் கவர்ந்தது. இதனால் மிக அருகில் வசிப்பவர்களே தங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் கருதி அவர்களை விடுதியில் தங்க ஏற்பாடு செய்தனர்.

இத்தனை பெருமைக்கும் உரியவர் நாடாக்கண்ணு நாடார். இவர்தான் அந்த பள்ளிக்கூடத்தை 1949–ம் ஆண்டு தொடங்கினார். அவரின் முயற்சியல் தற்போது உயர்நிலைப்பள்ளி அளவுக்கு உயர்ந்துள்ளது.

நாடாக்கண்ணு நாடார் தீவிர முருகப்பக்தர். இதனால்தான் தனது பள்ளிக்கூடத்துக்கு திருமுருகன் என்று பெயர் வைத்தார். திருமுருக கிருபானந்த வாரியாரின் விசுவாசி. அவரை அந்த காலத்திலே தனது பள்ளிக்கூடத்துக்கு அழைத்து வந்து அருளுரை வழங்க வைத்தார்.

நாடாக்கண்ணு நாடார் தோரணமலை முருகன் மீது அபார பக்தி கொண்டவர். பள்ளியின் வெற்றிக்கு தோரணமலை முருகன் அருளே காரணம் என்று மனப்பூர்வமாக நம்பியவர். அதனால்தான் ஒவ்வொரு ஆண்டும் பள்ளி இறுதித் தேர்வுக்கு முன்னால் மாணவர்களை இங்கு அழைத்து வந்து சிறப்பு பூஜை நடத்தி வழிபடுவார். முருகனின் அருளால் மாணவர்கள் நல்ல மதிப்பெண்ணுடன் தேர்ச்சி பெறுவார்கள். மேலும் கோவிலில் நடக்கும் தைப்பூச திருநாளின்போது திருமுருகன் பள்ளி மாணவ–மாணவிகளை இங்கு அழைத்து வந்து கலைநிகழ்ச்சிகளையும் நடத்த ஏற்பாடு செய்வார்.





கல்விப்பணியோடு இறை பணியையும் செய்து வந்த நாடாக்கண்ணு நாடார் இறைவனுடன் ஐக்கியமான பின்னர் அவரது பணியை மகன் திருவருள் குமரன் மேற்கொண்டார். அவரும் பள்ளியின் மேம்பாடுக்கு உழைத்ததோடு, இறைபணியையும் செவ்வனே செய்து வந்தார். அவரும் இறைவடி சேர்ந்த பின்னர் அன்னாரது மனைவி ஜெயமதி பள்ளிக்கூடத்தின் மேன்மைக்கு உறுதுணையாக இருந்து வருகிறார். அவரும் தோரணமலை முருகன் மீது மிகுந்த பக்தி கொண்டவர். அவர் கூறுகிறார்...

என்னுடைய மாமனார் தோரணமலை முருகன் மீது அபார பக்தி கொண்டவர். எதை தொடங்கினாலும் அவரின் சன்னதிக்கு வந்து அவரின் அருளாசி பெற்றே செய்வார். அந்த காரியம் முருகன் அருளால் வெற்றிகரமாக முடியும். அவரால் எங்கள் குடும்பமே முருகப்பெருமானுக்கு அடிமையானோம். அன்றைய நாள் பள்ளிக்கூடத்தில் அவர் இருக்கும் அறையே ஒரு கோவில் போல் விளங்கும். அந்த அறைக்குள் வந்தாலே தெய்வீக மனம் கமளும். அவர் தீவிர கிருபானந்தவாரியாரின் பக்தர். அவரது அலுவலகத்தில் முருகன் படங்களுடன் கிருபானந்த வாரியாரின் படமும் உண்டு. முருகனின் அருளால்தான் பள்ளிக்கூடம் இத்தனை வளர்ச்சி பெற்றது என்று அடிக்கடி கூறுவார். அவரின் வாரிசான எனது கணவர் திருவருள் குமரன் அவர்களும் தந்தை வழியில் இறை பணி மற்றும் கல்விப்பணிக்கு தன்னை அர்ப்பணித்தார். அவர் தெய்வத்திருவடியில் கொலுவேற்க சென்றபின் அவர்கள் வழியில் நாங்கள் உழைத்து வருகிறோம். இப்போது அவரது ஆசியும் எனது கணவரின் ஆசியும் கூட சேர்ந்து இந்தப் பள்ளிக்கூடத்தை வளர்ச்சி அடைய வைக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# ஆபரேஷனா? வேண்டாம்...

## தீராத நோயை குணமாக்கிய தோரணைமலையான்



டாக்டர்கள் சொன்ன வார்த்தை அந்த ஏழை விவசாயியை பெரிய துயரத்தில் ஆழ்த்தியது.

"உங்கள் மகனுக்கு ஆபரேஷன் செய்ய வேண்டும்."

– நீண்ட பரிசோதனைக்கு பின்னர் டாக்டரின் பரிந்துரைதான் இது.

"ஐயா எவ்வளவு செலவு ஆனாலும் பரவாயில்லை. ஆபரேஷன் பண்ணுங்க. ஆபரேஷன் பண்ணினா என் மகன் நல்லபடியா குணமாயிடுவான்ல்ல?"

"குணமாயிடுவான். ஆனா...."

"ஆனா என்னய்யா...?"

"அவனுக்கு இப்போ பதினாறு வயசு. நாற்பது வயசு வரைக்கும் அவன் கடினமான வேலை எதுவும் செய்யக்கூடாது. அதேபோல் கல்யாணம் செய்து வைக்காதீங்க. தாம்பத்தியம் கண்டிப்பாக கூடாது. அப்புறம் எதுவும் ஆயிடுச்சின்னா எங்களை சொல்லாதீங்க..."

–டாக்டர் இப்படி கூறியதுதான் பால்ராஜ்–ராஜகரி தம்பதியருக்கு தலையில் இடி விழுந்தது போல் இருந்தது.

தென்காசி அருகே அய்யனூரைச் சோந்த இந்த தம்பதியரின் மகன்தான் ரவிக்குமார். ஏழை விவாசாயியான பால்ராஜ் தன் மகனை எப்படியாவது நல்லமுறையில் படிக்க வைக்க ஆசைப்பட்டார். இந்த நிலையில்தான் அவனுக்கு பதினாறு வயது ஆகும்போது லேசாக இடுப்பில் வலி இருந்தது. நாள் ஆகஆக வலி அதிகரித்தது. இதனால்



அருகில் உள்ள ஆஸ்பத்திரிக்கு சென்று மகனை காட்டினார், தந்தை. அங்கு குணமாகாததால் மருத்துவர்கள் மாறிக்கொண்டே இருந்தனர். ஆனால் நோய்தான் குணமாகவில்லை. இறுதியில் பாளையங்கோட்டை ஐகிரவுண்டுக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அங்குதான் ஆபரேஷனைப் பற்றி எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

ஆபரேஷன் செய்தாலும் உடல் பூரண நலம் காணாது என்பதால்... அதற்கு பெற்றோர் சம்மதிக்கவில்லை. சித்தம் ஆயுர்வேதம் போன்று வேறு வைத்தியம் பார்க்கலாமா என்ற சிந்தனையில் இருந்தனர்...

ரவிக்குமாரும் தன் உடல் நலத்தை தானே உணர ஆரம்பித்தார். தந்தையின் ஆதரவில் எத்தனைக் காலம்தான் இருக்க முடியும்? ஆனால் மருத்துவத்தான் தன்னை முழுமையாக குணமாக்க இயலாது. அப்படியானால் ஆண்டவன்தான் இதற்கு வழிகாட்ட வேண்டும்–

இப்படி சிந்தித்துக் கொண்டிருக்கும் போது... தோரணமலைதான் அவரது கண்ணில் தென்பட்டது. மருத்துவத்தால் கைவிடப்பட்ட நோயை முருகப்பெருமான்தான் குணமாக்க வேண்டும் என்று நினைத்தேன். 2007–ம் ஆண்டு தைப்பூசத்திற்காக மாலை அணிந்து விரதம் இருந்தேன். 41 நாள் விரததத்திற்கு பின்னர் ஊரில் இருந்து நடந்தே தோரணமலை சென்று முருகப்பெருமானை வணங்கினேன். மூன்றாவது ஆண்டு சென்றபோது அலகு குத்திச் சென்றேன். என்ன ஆச்சரியம் அதன்பின் எனது இடுப்பு வலி பூரணமாக குணமாகிவிட்டது. ஆனாலும் தொடர்ந்து மாலைப்போட்டு விரதம் இருந்து மலைக்குச் சென்று வருகிறேன். உடல் நலத்தில் மட்டும் நான் வளர்ச்சி அடையவில்லை. பொருளாதாரத்திலும் வளர்ச்சி அடைந்ததேன். அதன்பின் எனக்கு திருமணமாகி குழந்தைகளும் பிறந்தனர்.


நாள் நிலங்கள் வாங்கி விவசாயம் செய்து வருகிறேன். எங்கள் ஊரில் புரோட்டாக் கடை நடத்தி வருகிறேன். மேலும் வில்லிசை கச்சேரியில் துணைப் பாடகராகவும் இருந்து வருகிறேன்.

என் வளர்ச்சியை கண்டு பலர் என்னுடம் மாலைப் போட்டு கோயிலுக்கு வர ஆரம்பித்தனர். தற்போது எங்கள் பகுதியில் இருந்து 40 பேர் மாலைப் போட்டு சென்று வருகிறோம். நாங்கள் பாதயாத்திரையாக செல்லும்போது முருகனின் ரதத்தை செய்து அதையும் இழுத்த படி கோயிலுக்கு செல்வோம்.

பஜனையின் போது முருகப்பெருமானைப்பற்றி நான் பாடுவேன். முதலில் நண்பர்கள் எழுதிக் கொடுத்தப் பாடலை பாடினேன். பின்னர் நானே சொந்தமாக பாட ஆரம்பித்தேன். எல்லாம் அவன் அருள்தான்..

இப்படி முருகப்பெருமானின் பெருமைகளை கூறிய ரவிக்குமாரின் மனைவி பெயர் முருகேசுவரி. பாலகன், வேலவன் என்ற இரண்டு மகன்கள் உள்ளனர்.

# தமிழ் புத்தாண்டு கொண்டாட்டம் சமூக சேவகர்களுக்கு தோரணமலையான் விருது



தோரணமலையில் கொண்டாடப்படும் முக்கிய விழாக்களில் தமிழ்புத்தாண்டும் ஒன்று. ஆண்டுதோறும் இந்த விழாவில் ஒவ்வொரு புதுமைகளை கோவில் அறங்காவலர் செண்பகராமன் புகுத்தி வருகிறார். இந்த ஆண்டும் இந்த திருவிழா பல்வேறு சிறப்புகளை தாங்கி விழா களை கட்டியது.

பக்தர்கள் அதிகாலையிலேயே குவிய ஆரம்பித்துவிட்டனர். அதிகாலையில் வல்லப விநாயகர், முருகப்பெருமான், உற்சவர்களுக்கு சிறப்பு அபிஷேகம் நடந்தது. அதன்பின் சிறப்பு அலங்காரத்துடன் பூஜைகள் நடந்தன. உற்சவர்களுக்கு அலங்காரம் செய்யப்பட்டு சப்பரத்தில் எழுந்தருள வைத்தனர்.

இதற்கிடையே 21 பெண்கள் பொங்கல் வைத்து அதை உற்சவர்கள் முன் படைத்தனர். இதனை அடுத்து உற்சவர்கள் வீதிஉலா புறப்பட்டது. தோரணமலையில் உள்ள ஒவ்வொரு சன்னதிக்கு சென்றது. தெப்பக்குளம் வரை சென்று திரும்பியது.

மாதந்தோறும் கடைசி வெள்ளி அன்று விவசாயம் செழிக்க வருணகலச பூஜை நடத்தப்படும். தமிழ்புத்தாண்டு அன்றும் வேளாண்மை செழித்து விவசாயிகள் செழிக்க வேளாண் கருவிகளுக்கு உற்சவர்கள் முன்னிலையில் சிறப்பு

பூஜை நடத்தப்பட்டது.

இதனை அடுத்து சொக்கலால் மண்படத்தில் உற்சவர்கள் எழுந்தருள சிறப்பு பூஜை நடந்தது.

அதன்பின் விவசாயிகள் மேடைக்கு அழைத்து வரப்பட்டு கவுரவிக்கப்பட்டனர். அவர்கள் கையால் சிறந்த சமூக சேவர்களுக்கு தோரணமலையான் விருது வழங்கப்பட்டது.

எழுத்தாளர் முத்தாலங்குறிச்சி காமராசு வரவேற்றார். மதுரை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் டாக்டர் அழகுமணி, மண்புழு ஆராய்ச்சியாளர் டாக்டர் சுதாகர், திருச்செந்தூர் கோட்டாச்சியரின் உதவியாளர் கோபாலகிருஷ்ணன், தெற்குகாரசேரி கிராமநிர்வாக அதிகார் முனைவர் கந்தசுப்பு, பரதநாட்டிய கலைஞர் திருநங்கை பொன்னி, திருநங்கை அஞ்சலி, வில்லுபாட்டு மாதவி, முகநூல் விமர்சகர் தன்னூத்து குமரன், மூத்த பத்திரிக்கையாளர் பரமசிவன், மூலைக்கரைப்பட்டி முதுகலை பட்டதாரி ஆசிரியர் ஆவுடையப்ப குருக்கள், திரைப்பட இயக்குனர்கள் அயோத்தி மந்திரமூர்த்தி, பம்பர் பட இயக்குனர் செல்வக்குமார், 1947ஆகஸ்ட்15 பட இயக்குனர் பொன் குமார், ஊடகவியாளர் கோபால கிருஷ்ணன், கோயில் தரிசனம் பாடலாசிரியர் துரை நாகராஜன், வெய்க்காலிபட்டி ஆர்.எல். குமரன், எழுத்தாளர் கடையம் பாலன், தென்காசி லைப், தளிர் அமைப்பு உள்பட 20 பேருக்கு பொன்னாடை போர்த்தி



கௌரவித்து தோரணமலையில் 50 ஆண்டு இறைப்பணி செய்த ஆதிநாரயணன் அய்யா நினைவு தோரணமலையான் விருது 2024 வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் ஏராளமானவர்கள் கலந்துகொண்டனர்.

இதனைஅடுத்து தோரணமலை இசைக்குழுவினரின் பக்தி இன்னிசை நிகழ்ச்சி நடந்தது. அதன்பின் முத்துமாலைபுரம் ஆதிநாராயணன்–சந்திரலீலா நினைவு மாலைநேர பள்ளி மாணவ– மாணவிகளின் மற்றும் லோட்டஸ் பள்ளி மாணவ செல்வங்களின் கலை நிகழ்சச்கள், இரவு நூற்றுக்கணக்கான அகல் விளக்கு தீபம் ஏற்றுதல் நிகழ்ச்சி நடந்தது.

தோணமைலையானின் இறைப்பணி பெருவள்ளல் டாக்டர் தர்மராஜ் கோவில் தரிசனம் யூ டியூப் சேனல் வழங்கும் ரோணமலை பேரழகன் பாடல்களை வெளியிட்டார். பகல் முழுவதும் கோயில் நிர்வாகம் சார்பில் அன்னதானம் நடைபெற்றது.

# தோரணமலையில் வள்ளி கும்மி



தோரணமலையில் நடந்த தமிழ் புத்தாண்டு விழாவில் இடம்பெற்ற கலை நிகழ்ச்சிகள் அனைத்தும் மிகவும் சிறப்பாக அமைந்தது. இன்னிசை நிகழ்ச்சி, பள்ளி மாணவ–மாணவிகளின் நடன நிகழ்ச்சி எல்லாமே பக்தி மயமாக இருந்தது. அதேபோல் இந்த ஆண்டு வள்ளி கும்மி அறிமுகப்படுத்தப்பட்டது. தனித்துவம் பெற்ற இந்த நிகழ்ச்சியில் பெண்கள், சிறுமிகள் எல பலர் பங்கேற்றனர். அவர்கள் அனைவரும் ஒரே சீருடையில் பாட்டுடன் கும்மி அடித்து ஆடியது வெகுவாக கவர்ந்தது.

# 800 கிலோ அரிசியில் அன்னதானம்

இந்த ஆண்டு தமிழ்புத்தாண்டு தினத்தில் தோரணமலைக்கு பக்தர்கள் வருகை மிக அதிகமாக இருந்தது. மாலை வரை பக்தர்கள் சாரைசாரையாக வந்தவண்ணம் இருந்தனர். அன்னதானம் திருமண மண்டபத்தில் வழங்கப்பட்டது.

காலையில் வழக்கம்போல் பொங்கல் வழங்கப்பட்டது. அது முடிவடையும் நேரத்தில் சாம்பார் சாதம் இடைவிடாது வழங்கப்பட்டது. கடந்த ஆண்டு மொத்தம் 500 கிலோ அரிசி சமைக்கப்பட்டது. அதேபோல் இந்த ஆண்டும் 500 கிலோ அரிசியில் சாதம் தயார் செய்யப்பட்டது. ஆனால் பக்தர்கள் தொடர்ந்து வந்தபடி இருந்ததால் வெகுவிரையில் சாதம் நிறைவடைந்தது. இதனால் உடனடிவாக அவசர அவசரமாக சாதம் தயாரிக்கப்பட்டது. அதாவது தக்காளி சாதம், அடுத்து புளி சாதம், அதன்பின்ன தயிர் சாதம் தயாரித்து பக்தர்களுக்கு வழங்கப்பட்டது. அதே போல் சுத்தமான குடிநீர் வசதியும் செய்யப்பட்டது.

# குருபெயர்ச்சி பலன்கள்

நவகிரகங்களில் முக்கியமான கிரகமாக குருவும் விளங்குகிறது. சுபக்கிரகமாக கருதப்படும் குருபகவான் தெய்வீகத்திற்கும், வேதாந்த ஞானத்திற்கும் முக்கிய ஆதாரமாக விளங்குகிறார். பொன்னிற மேனியான அவர் மஞ்சள் வஸ்திரத்தை அணிந்து கொண்டு வெள்ளை யானை வாகனத்தில் விண்ணில் வலம் வருகிறார். குருபகவான் தனது பயணத்தில் ஒரு ராசி மண்டலத்தை கடக்க சுமார் ஓராண்டு ஆகும். அதன்படி 12 ராசிகளையும் கடந்து வர 12 ஆண்டுகள் ஆகும். இந்த ஆண்டு தமிழ் வருட பிறப்பும் குரு பெயர்ச்சியும் ஒரே தமிழ் (சித்திரை) மாதத்தில் வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| புதன் செவ்வாய் ராகு | சூரியன் சுக்கிரன் | குரு | |
| சனி | 1–5–2024 மாலை 5–28 மணி | | |
| சந்திரன் | | | |
| | | | கேது |

குருபகவான் பெரும்பாலும் எல்லா ராசியினருக்கும் நன்மைகளை செய்யவே விரும்புவார். அப்படியே அவர் கெடுபலன்களை செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டாலும் அந்த கெடுபலன் நமக்கு ஒரு படிப்பினையை உணர்த்துவதாகவே இருக்கும். அதாவது ஆசிரியர் மாணவனை கண்டிப்பது போன்றதாகவே அமையும்.

குருபகாவன் வாக்கிய பஞ்சாங்கபடி மே 1–ந் தேதி அன்று (சித்திரை18–ந்தேதி புதன்கிழமை) மாலை 5–28 மணிக்கு மேஷ ராசியில் இருந்து ரிஷப ராசிக்கு மாறுகிறார். ரிஷப ராசியில் இருக்கும் குருபகவான் 15–10–2024 அன்று வக்கிரம் அடைந்து 10–2–2025 வக்கிர நிவர்த்தி அடைகிறார். குரு வக்கிரம் அடைந்தாலும், அதாவது பின்னோக்கி நகர்ந்தாலும் ரிஷப ராசிக்குள்ளேயே இருக்கிறார். ரிஷப ராசியில் இருக்கும் குருபகாவன் 2025 மே 11–ந் தேதி அன்று மிதுன ராசிக்கு மாறுகிறார்.

இந்த குருபெயர்ச்சி மேஷம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம் ஆகிய ராசியினருக்கு மிகவும் சிறப்பான பலன்களையும். ரிஷபம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், மீனம் ஆகிய ராசியினருக்கு பார்வைகளால் நற்பலன்களை தருவார்.

இந்த குரு பெயர்ச்சி பலன்கள் ஒவ்வொரு ராசி வாரியாக விரிவாக கணித்து கொடுக்கப்பட்டு உள்ளது. கோச்சார அடிப்படையில் பலன் பார்க்கும்போது ஒரு குறிப்பிட்ட கிரகத்தை மட்டும் வைத்து பலனை பார்க்கக்கூடாது. அதன்படி முக்கிய கிரகங்களான சனி, ராகு, கேது ஆகியவையின் இருப்பிடத்தைக்கொண்டும் ஆராய்ந்து இங்கே பலன்கள் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

தற்போது கும்ப ராசியில் இருக்கும் சனிபகவான் **19–6–2024** முதல் **4–11–2024** வரை வக்கிரம் அடைகிறார். வக்கிரம் அடைந்தாலும் கும்ப ராசிக்குள்ளேயே இருக்கிறார். தற்போது ராகு மீன ராசியில் இருக்கிறார். கேது கன்னி ராசியில் இருக்கிறார். அவர்கள் **26–4–2025** அன்று பெயர்ச்சி அடைந்து ராகு கும்ப ராசிக்கும், கேது சிம்ம ராசிக்கும் இடம் பெயருகிறார்கள்.

மேலும் வாசகர்கள் இன்னொரு அம்சத்தை கவனிக்க வேண்டும். இங்கே தொகுத்து தரப்பட்டிருப்பது கோச்சார பலன்களே. இதில் சிலருக்கு சுமாரான பலன்களே நடக்கும் என்று குறிப்பிட்டு இருந்தால்கூட அவர்கள் ஜாதகத்தில் நல்ல திசை, புத்தி நடந்தால் நன்மையே நடக்கும். இங்கே ஒவ்வொரு ராசியினருக்கும் பரிகாரம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. உங்களால் இயன்ற பரிகாரத்தை செய்தால்போதும். பணத்தைக் கொட்டித்தான் பரிகாரம் செய்ய வேண்டும் என்பது இல்லை. பரிகாரம் செய்வதால் கெடுபலன்கள் குறைந்து நன்மை அதிகரிக்கும். மனதில் நிரந்தர மகிழ்ச்சி நிலவும். – *பண்டித காழியூர் நாராயணன்.*

## சாரைசாரையாக பக்தர்கள்



தமிழ்புத்தாண்டு தினத்தன்று தோரணமலைக்கு பக்தர்கள் சாரைசாரையாக வந்தவண்ணம் இருந்தனர். தென்காசி–கடையம் சாலையில் இருந்து தோரணமலை வரை பக்தர்கள் நடமாட்டமாக இருந்தது. குறிப்பாக ராமநதி அணை விலக்கில் இருந்து தோரணமலை வரை போக்குவரத்து நெரிசல் ஏற்படும் அளவுக்கு பக்தர்கள் அலைமோதினார்கள். அதேபோல் மலைப்பாதையிலும் பக்தர்கள் நடந்து சென்றது, மிகவும் ரம்மியமாக இருந்தது.



## மேஷம்

அசுவினி, பரணி, கார்த்திகை
1 ம் பாதம் முடிய

ராகு தோஷம் விலக
தோரணமலை மீதுள்ள
பத்திரகாளி அம்மனுக்கு
விளக்கு ஏற்றி வணங்குகங்கள்.

நல்லகுணம் கொண்ட மேஷராசி அன்பர்களே! உங்களிடத்தில் சிறிது முன்கோபம் இருக்கத்தான் செய்யும். எதிலும் முதலில் வரவேண்டும் என்ற ஆவலோடு இருப்பீர்கள். குருபகவான் இது வரை உங்கள் ராசியில் இருந்து சிற்சில இன்னலை கொடுத்திருப்பார். குறிப்பாக குடும்பத்தில் குழப்பமும், பிரச்சினைகளும் வந்திருக்கும். உத்தியோகம் பார்ப்பவர்கள் ஏதேனும் ஒரு பிரச்சினையை சந்தித்து கொண்டே இருந்திருப்பர். இந்த நிலையில் தான் குருபகவான் 2–ம் இடமான ரிஷப ராசிக்கு செல்கிறார். இது சிறப்பான அம்சம். இதுவரை குருவால் ஏற்பட்டு வந்த இடர்பாடுகள் அனைத்தும் இருக்குமிடம் தெரியாமல் மறையும். குடும்பத்தில் நிலவிவந்த குழப்பத்திற்கு விடுதலை கிடைக்கும். மந்த நிலை மாறும். துணிச்சல் பிறக்கும். பண வரவு கூடும். தேவையான பொருட்களை வாங்கலாம். பகைவர்களின் சதி உங்களிடம் எடுபடாது. அவர்கள் சரண் அடையும் நிலை ஏற்படும். ஆனால் அவர் 15–10–2024 முதல் 10–2–2025 வரை வக்கிரம் அடைகிறார். அவர் வக்கிரம் அடைந்தாலும், அதாவது பின்னோக்கி நகர்ந்தாலும் ரிஷப ராசிக்குள்ளேயே இருக்கிறார். ஆதலால் கவலை கொள்ள தேவை இல்லை

தற்போது சனிபகவான் உங்கள் ராசிக்கு 11–ம் இடமான கும்பத்தில் உள்ளார். இது மிகசிறப்பான இடம். இங்கு அவர் உங்களுக்கு பல்வேறு நன்மைகளை தர இருக்கிறார். குறிப்பாக பொன்னையும் பொருளையும் தருவார். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். விருந்து, விழா என சென்று வருவீர்கள். ஆனந்தம் இருக்கும். கடந்த காலம் பெண்களால் பல்வேறு இன்னலுக்கு ஆளாகி இருப்பீர்கள். ஆனால் அதேப் பெண்கள் உங்களுக்கு உதவிகரமாக இருப்பர். அவர்களால் நன்மை கிடைக்கும். தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள். புதிய தொழில் தொடங்கலாம். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கலாம்.

நிழல் கிரகமான ராகு தற்போது உங்கள் ராசிக்கு 12–ம் இடமான மீனத்தில் இருக்கிறார். இது சுமாரான நிலைதான். கேது 6–ம் இடமான கன்னி ராசியில் இருக்கிறார். இது உகந்த இடம். அங்கு அவர் நற்பலனை தருவார்.

மேறகண்ட நிலையை பார்க்கும்போது குரு, சனி,கேது நன்மை தருவார்கள்.

குடும்பத்தில் இருந்து வந்த பின்னடைவுகள் மறையும். தடைபட்டு வந்த திருமணம் நடக்க வாய்ப்பு உண்டு. தம்பதியினர் இடையே ஒற்றுமை மேம்படும். புதிய வீடு–மனை வாகனம் வாங்கலாம். குடும்பத்தோடு புனித ஸ்தலங்களுக்கு சென்று வருவீர்கள்.

உத்தியோகத்தில் முன்னேற்றம் இருக்கும். மேல் அதிகாரிகளின் அனுசரணை

கிடைக்கும். வேலை இன்றி இருப்பவர்கள் வேலை கிடைக்கப் பெறலாம். பாதுகாப்பு தொடர்பான வேலையில் இருப்பவர்கள் சிறப்பான முன்னேற்றத்தைக் காணலாம். எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், ஆசிரியர் பணியில் இருப்பவர்களுக்கு இந்த காலம் உன்னதமாக இருக்கும். வக்கீல்களுக்கு வழக்கு, விவகாரங்கள் சிறப்பாக இருக்கும். போட்டியாளர்களை எதிர்த்து வெற்றிக் கொள்ளும் ஆற்றல் இருக்கும். தாங்கள் நடத்தும் வழக்குகளில் சாதகமான தீர்ப்பு கிடைக்கும்.


வியாபாரம் வளர்முகமாக இருக்கும். பணப்புழக்கம் மிகஅதிகமாக இருக்கும். உங்களிடம் வேலை பார்ப்பவர்கள் நன்றி கடனுடன் இருப்பர். வாடிக்கையாளர் மத்தியில் நற்பெயர் கிடைக்கும். உங்கள் வளர்ச்சிக்கு ஒரு பெண் பின்னணியாக இருப்பார். பங்கு வர்த்தகம் நல்ல லாபத்தைத் தரும். கோவில் மற்றும் புண்ணிய காரியங்களுக்கான தொழில் சிறந்து விளங்கும். தொழில் ரீதியாக வெளியூர் பயணம் சென்றவர்கள் வீடு திரும்புவர். தரகு,கமிஷன் தொழில் பணவரவு இருக்கும்.

கலைஞர்கள் சிறப்படைவர். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். சமூகநல சேவகர்கள் சிறப்பு பெறுவர். முக்கிய பொறுப்பு கிடைக்க வாய்ப்பு உள்ளது. அரசியல்வாதிகள் பகைவர்களின் சதியை முறியடிக்கும் வல்லமையை பெறுவீர்கள். தேர்தல்களில் வெற்றி வாய்ப்புகள் பிறகாசமாக உள்ளது. மாணவர்களுக்கு நல்ல மதிப்பெண் கிடைக்கும். மேல் படிப்பில் விரும்பிய பாடம் கிடைக்கும். விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெறலாம். காலர்ஷிப் போன்றவை கிடைக்கும். விவசாயிகளுக்கு பாசிபயறு, நெல், மஞ்சள், கொண்டைக்கடலை,கொள்ளு,துவரை, பழவகைகள் நல்ல வருவாயைக் கொடுக்கும். கால்நடை செல்வம் பெருகும். கோழி,ஆடு வளர்ப்பில்நல்ல வருமானத்தை பெறுவர். புதியசொத்து வாங்க அனுகூலம் உண்டு. பக்கத்து நிலகாரர்கள் வகையில் இருந்து வந்த தொல்லைகள் மறையும்.

பெண்களுக்கு தெய்வ அனுகூலம் கிடைக்கும். நகை–ஆபரணங்கள் வாங்கலாம். சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்வர். திருமணம் ஆகாமல் இருக்கும் பெண்களுக்கு திருமணம் கைகூடும். அதுவும் நல்ல வரனாக அமையும். சகோதரர்கள் மிகவும் ஆதரவுடன் இருப்பர். பெண் காவலர்கள் சிறப்பான பலனைப் பெறுவர். வேலையில் நிம்மதியும், திருப்தியும் கிடைக்கும்.பூவியாபாரம் செய்யும் பெண்கள் நல்ல வருமானத்தை பெறுவர்.உஷ்ணம்,தோல்,தொடர்பான நோய் பூரண குணம் அடையும்.



பரிகாரம்- நவக்கிரகங்களில் ராகுவுக்கு அர்ச்சனை செய்யுங்கள். ராகு காலத்தில் பைரவருக்கு தயிர் சாதம் படைத்து வழிபடலாம். நாக தேவதையை வணங்கி வாருங்கள். ராகுவுக்கு நீல நிறவஸ்திரத்தை சாத்தி அர்ச்சனை செய்யுங்கள். ஏழைகளுக்கு உளுந்து தானம் செய்யலாம்.





# ரிஷபம்

கார்த்திகை 2-ம் பாதம்
முதல் ரோகிணி மிருகசீரிஷம்
2-ம் பாதம் வரை

தோரணமலையில் உள்ள
விநாயகர் சன்னதிக்கு பின்புறம்
உள்ள வியாழன் மற்றும்
மலையடிவாரத்தில் உள்ள
முருகனையும் வணங்குங்கள்.

பொறுமையும் நிதானமும் கொண்ட ரிஷப ராசி அன்பர்களே! நீங்கள் அமைதியாக இருந்து எதையும் சிறப்பாக செய்து முடிக்கும் வல்லமை கொண்டவர்கள். குருபகவான் இதுவரை உங்கள் ராசிக்கு 12-ம் இடமான மேஷ ராசியில் இருந்தார்.அவர் பல்வேறு இடையூறுகளை கொடுத்து இருப்பார். பொருளாதார நஷ்டம் ஏற்பட்டு இருக்கும். சிலரது வாழ்க்கையில் துக்ககரமான சம்பவமும் நிகழ்ந்து இருக்கலாம்.தற்போது குருபகவான் உங்கள் ராசிக்கு அடியெடுத்து வைக்கிறார். இதுவும் அவ்வளவு சிறப்பான இடம் என்று சொல்ல முடியாது. ஆனாலும் அவர் 12-ம் இடத்தில் இருந்தது போல கெடு பலன்களை செய்ய மாட்டார். குரு1-ம் இடத்தில் இருக்கும் போது கலகம் விரோதம் வரும் என்றும் மந்த நிலை ஏற்படும் என்றும் பொதுவாக கூறப்படுவது உண்டு. ஆனாலும் கவலைபட வேண்டாம். குருபகவான் சாதகமற்ற நிலையில் இருந்தாலும் அவரது அனைத்துப் பார்வைகளும் சிறப்பாக உள்ளது. குருவின் பார்வைக்கு கோடி நன்மை உண்டு. மேலும் அவர் 15-10-2024 முதல் 10-2-2025 வரை வக்கிரம் அடைகிறார்.அவர் வக்கிரத்தில் சிக்கும் போது கெடுபலனை தரமாட்டார் மாறாக நன்மையே தருவார்.

தற்போது சனிபகவான்உங்கள் ராசிக்கு பத்தாமிடமான கும்பத்தில் இருக்கிறார். பத்தாமிடம் என்பது தொழில் ஸ்தானம். உங்கள் தொழிலில் இருந்து வந்த இடையூறுகள் மறையும் உங்களுக்கு எதிராக செயல்பட்டவர்கள் தங்கள் தவறை உணர்ந்து ஒதுங்கிக் கொள்வார்கள். அதேநேரம் சனிபகவானுக்கு பத்தாமிடம் என்பது ஓகோவென நன்மையை தருவார் என்று சொல்ல முடியாது. சிலர் சிற்சில அவமானங்களை சந்திக்க நேரிடலாம். சிலரால் நீங்கள் பொல்லாப்புக்கு ஆளாகலாம். எனவே வீண்விவாதங்களில் ஈடுபட வேண்டாம். பிறர் விசயத்தில் தலையிடாமல் இருப்பது நல்லது.

தற்போது ராகு 11-ம் இடமான மீனத்திதில் இருக்கிறார். இங்கு அவரால் பொன், பொருள் கிடைக்கும். மகிழ்ச்சியும், ஆனந்தமும் அதிகரிக்கும். பெண்கள் மிக உறுதுணையாக இருப்பர்.கேது தற்போது 5-ம் இடமான கன்னி ராசியில் இருக்கிறார். இது சிறப்பான இடம் இல்லை. இந்த இடத்தில் அவர் அரசு வகையில் சிற்சில பிரச்சி -னையை தரலாம். மேலும் திருட்டு பயமும் ஏற்படலாம்.

குருவின் பார்வையால் உங்களுக்கு அபார ஆற்றல் பிறக்கும். நகைஆபரணங்கள் வாங்கலாம். தம்பதியினர் இடையே ஒற்றுமை மேம்படும். அக்கம் பக்கத்தினர் அனுசரணையுடன் இருப்பர். ராகு பொருளாதாரத்தில் நல்ல வளத்தைத் தருவார்.

பெண்களுக்கு சாதகமான திசையில் காற்று வீசுவதால் முக்கிய பொறுப்புகளை அவர்கள் வசம் ஒப்படையுங்கள். அது சிறப்பாக முடியும்.15–10–2024 முதல் 10–2–2025 வரை தடைபட்டு வந்த திருமணம் நடக்க வாய்ப்பு உண்டு. சிலர் புதிய வாகனம் வாங்கலாம். எந்த பிரச்சினை வந்தாலும் அதை குரு,கேது பார்வையால் எளிதில் முறியடிப்பீர்கள். அவ்வப்போது செலவுகள் வந்தாலும் அதை ஈடுகட்டும் அளவுக்கு வருமானம் இருக்கத்தான் செய்யும்.

உத்தியோகத்தில் சிலருக்கு இடமாற்றம் வரலாம். பெண்கள் வகையில் இருந்த இடர்பாடுகள் மறையும். பாதுகாப்பு தொடர்பான வேலையில் இருப்பவர்கள் சிறப்பான முன்னேற்றத்தைக் காணலாம். எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், ஆசிரியர் பணியில் இருப்பவர்களுக்கு இந்த காலம் உன்னதமாக இருக்கும். மருத்துவர்கள் கூடுதல் பலன்களை காணலாம். வக்கீல்கள் தாங்கள் நடத்தும் வழக்குகளில் சாதகமான தீர்ப்பு கிடைக்கும். 15–10–2024 முதல் 10–2–2025 வரை மனதில் ஏற்பட்ட குழப்பங்கள் நீங்கி உற்சாகம் அடைவீர்கள். ஏதோ காரணத்தால் வேலையை இழந்தவர்கள் மீண்டும் வேலை கிடைக்க பெறுவர்.

வியாபாரம் வளர்முகமாக இருக்கும். தங்கம், வெள்ளி, வைரம் நகைகள் வியாபாரம் செய்பவர்கள் அதிக லாபத்தைப் பெறுவர். தொழில் ரீதியாக வெளியூர் பயணம் சென்றவர்கள் வீடு திரும்புவர். கணினித் தொழில், பத்திரிகை, அச்சு தொடர்பான தொழில்களும், தரகு,பழைய பொருட்களை வாங்கி விற்பது போன்ற தொழில்களும் சிறந்து விளங்கும். வயதால் மூத்த பெண்கள் உங்களுக்கு தக்க சமயத்தில் உதவுவார்கள்.அதன் மூலம் வளர்ச்சியை அடையலாம்.

கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். சமூகநல சேவகர்கள் சிறப்பு பெறுவர். அரசியல்வாதிகள் மேம்பாடு அடைவர்.மாணவர்கள் சிரத்தை எடுத்து படித்தால் பலன் கிடைக்கும். குரு பார்வையால் நல்ல மதிப்பெண் கிடைக்கும். விவசாயிகள் புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி சிறப்பான மகசூலை பெறுவர். கால்நடை செல்வம் பெருகும். கோழி, ஆடு வளர்ப்பில் நல்ல வருமானத்தை பெறுவர்.

பெண்கள்; தனம்–மனம் நிறைவாக இருக்கும். உங்களால் குடும்பம் சிறந்து விளங்கும். குருவின்7–ம் இடத்துப் பார்வையால் . திருமணம் ஆகாமல் இருக்கும் பெண்களுக்கு திருமணம் கைகூடும் அதுவும் நல்ல வரனாக அமையும். சகோதரிகளால் மேன்மை கிடைக்கும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். வேலையில் மன மகிழ்ச்சி ஏற்படும் உயர்ந்த பதவி கிடைக்கும். உஷ்ணம், தோல், தொடர்பான நோய் முதலியன பூரண குணம் அடையும்.

*பரிகாரம்–*
*குருபகவானுக்கு மஞ்சள் நிற பூக்களால் அர்ச்சனை செய்யுங்கள்.*
*சனிபகவானுக்கு நல்லெண்ணை தீபம் ஏற்றுங்கள்.*
*ஊனமுற்றவர்களுக்கு இயன்ற உதவி செய்யுங்கள்.*



## மிதுனம்

மிருகசீரிஷம் 3,4ம் பாதம்,
திருவாதிரை,புனர்பூசம்1,2,3 ஆம்பாதம்

தோரணமலையில் உள்ள நவக்கிர சன்னதியை சுற்றி வந்து சப்தகன்னியரையும் வணங்குங்கள்.

சீரிய சிந்தனையும்,நல்ல பேச்சாற்றலும் கொண்ட மிதுன ராசி அன்பர்களே! யார்தயவும் இன்றி சொந்தகாலில் நின்று முன்னேற நினைப்பீர்கள். இதுவரை குருபகவான் 11–ம் இடத்தில் இருந்து பல்வேறு நன்மைகளை செய்திருப்பார். குறிப்பாக புதிய பதவியும், சம்பள உயர்வும் கிடைத்திருக்கும். வேலையில் திருப்தி கண்டிருப்பீர்கள். வியாபாரம் சிறப்பாக இருந்திருக்கும். பணப்புழக்கம் மேம்பட்டிருக்–கும். எடுத்த காரியத்தை எல்லாம் வெற்றிகரமாக செய்து முடிந்திருப்பீர்கள்.இப்படி பல்வேறு நன்மைகளை தந்த குரு பகவான் இப்போது உங்கள் ராசிக்கு 12–ம் இடத்திற்கு வருகிறார். இது சுமாரான நிலையே. இங்கு அவரால் பொருள் விரயம் ஏற்படும். பல்வேறு தொல்லைகள் உருவாகும். மனதில் நீங்காத வருத்தம் உருவாகும். வீண் அலைச்சல் ஏற்படும். இதனால் நீங்கள் மனம் ஒடிந்துபோய்விட வேண்டாம். குரு பகவான் கெடுபலனை செய்யும்போது அது உங்களுக்கு இறுதியில் நன்மையிலேயே முடியும். ஆசிரியர் மாணவனை கண்டிப்பது போன்றே குரு பகவான் தண்டனை அமையும். மாணவனை ஆசிரியர் கண்டிப்பது நன்மைக்கே. அவர் 15–10–2024 முதல் 10–2–2025 வரை வக்கிரம் அடைகிறார். அவர் வக்கிரத்தில் சிக்கும் போது கெடுபலனை தரமாட்டார் மாறாக நன்மையே தருவார்.

தற்போது சனிபகவான் 9–ம் இடத்தில் இருந்து முழு நன்மையையும் தருவார் என்று எதிர்பார்க்க வேண்டாம். சிற்சில சறுக்கல்களை தரத்தான் செய்வார். ஆனால் சனிபகவானின் மூன்று பார்வைகளும் உங்களுக்கு சாதகமாக உள்ளது. இதன்மூலம் நீங்கள் சாதனை படைக்கலாம். அவரது மூன்றாம் இடத்துப்பார்வையால் பொன், பொருள் கிடைக்கும். மகிழ்ச்சி நிலவும். உங்கள் முன்னேற்றத்திற்கு பெண்கள் மிகவும் உறுதுணையாக இருப்பார்கள். 7–ம் இடத்துப்பார்வையால் காரிய அனுகூலத்தைப் பெறலாம். தொழிலில் விருத்தியைக் காணலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். 10–ம் இடத்துப்பார்வையால் பகைவர்களின் சதியை முறியடிக்கும் வல்லமை பெறுவீர்கள்.

நிழல் கிரகமான ராகு தற்போது உங்கள் ராசிக்கு 10–ம் இடமான மீனத்தித்தில் இருப்பது சிறப்பான இடம் இல்லை. அவரால் சிலர் பொல்லாப்பை சந்திக்க நேரிடலாம். கேது தற்போது 4–ம் இடமான கன்னி ராசியில் இருக்கிறார். இந்த இடத்தில் இருக்கும் போது அவரால் தீயோர் சேர்க்கைக்கு ஆளாகி அவதியுறலாம். உடல் நலம் பாதிப்பு வரலாம். வயிறு பிரச்சினை வரும்.

இந்த காலத்தில் பெண்களுக்கு சாதகமான திசையில் காற்று வீசுவதால் முக்கிய பொறுப்புகளை அவர்கள் வசம் ஒப்படையுங்கள். அது சிறப்பாக முடியும். சனி

பார்வையால் பொருளாதாரத்தில் நல்ல வளத்தைத் தருவார். பெண்களால் அனுகூலம் கிடைக்கும். மேலும் கேதுவின் பின்னோக்கிய 11–ம் இடத்துப் பார்வையால் உங்களுக்கு அபார ஆற்றல் பிறக்கும். நகை–ஆபரணங்கள் வாங்கலாம். புதிய வீடு–மனை வாகனம் வாங்கலாம்.

உத்தியோகத்தில் உன்னத பலனை எதிர்பார்க்க முடியாது. அதேநேரம் பின்தங்கிய நிலைக்கு செல்ல மாட்டீர்கள். வேலையில் பளு இருக்கும். பெண்கள் வகையில் இருந்த இடர்பாடுகள் மறையும். ஆசிரியர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். அலைச்சல் இருக்கும். மேல் அதிகாரிகளிடம் அனுசரித்து போகவும். இடமாற்றம் ஏற்படலாம். 15–10–2024 முதல் 10–2–2025 வரை வளர்ச்சி காணலாம். வேலையில் திருப்தியும், நிம்மதியும் காண்பீர்கள். ஐ.டி துறையினர்களுக்கு மேல் அதிகாரிகளின் கருணை பார்வை கிடைக்கும். அரசு வேலையில் இருப்பவர்கள் உங்கள் திறமைக்கு உகந்த மரியாதை கிடைக்கும்.

பாதுகாப்பு தொடர்பான வேலையில் இருப்பவர்களுக்கு இருந்து வந்த பிரச்சினை மறையும். விரும்பிய இடத்துக்கு மாற்றம் பெறலாம். வக்கீல்களுக்கு தாங்கள் நடத்தும் வழக்குகளில் சாதகமான தீர்ப்பு கிடைக்கும். புதிய வழக்குகள் எடுத்து நடத்தும் போது சற்று கவனம் தேவை. மருத்துவர்களுக்கு அலுவலக ரீதியாக முன்னேற்ற – மான சம்பவம் நடக்கும்.

வியாபாரிகளுக்கு வருமானம் சீராக இருக்கும். எதிலும் அதிக முதலீடு போட வேண்டாம். புதிய தொழில் தொடங்குவதை தற்சமயம் தவிர்ப்பது நல்லது. இரும்பு, அச்சு தொடர்பான தொழில்களும், தரகு, பழைய பொருட்களை வாங்கி விற்பது போன்ற தொழில்களும் சிறந்து விளங்கும். வயதால் மூத்த பெண்கள் உங்களுக்கு தக்க சமயத்தில் உதவுவார்கள்.

கலைஞர்களுக்கு முயற்சிகளில் தடையும், மனதில் சோர்வும் வரும். பொதுநல சேவகர்கள், அரசியல்வாதிகள் சீரான நிலையில் இருப்பர். மாணவர்களுக்கு ஆசிரியர்களின் அறிவுரை கைகொடுக்கும். விவசாயிகளுக்கு உளுந்து, எள், பனைபொருள் மற்றும் மானாவாரி பயிர்களில் சிறப்பான மகசூல் கிடைக்கும்.

பெண்கள் நன்மதிப்பை பெற்று குதூகலம் அடைவர். பெற்றோர் வீட்டில் இருந்துபொருட்கள் வரப்பெறலாம். சகோதரர்களால் பணஉதவி கிடைக்கும்.

உடல்நலம்: ஒருவித பயம் ஆட்கொள்ளும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை.

*வழிபாடு: சந்தர்ப்பம் கிடைக்கும் போது நவகிரகங்களை சுற்றி வாருங்கள்.ராகுவுக்கு நீல நிறவஸ்திரத்தை சாத்தி அர்ச்சனை செய்யுங்கள்.வீட்டிலேயே துர்க்கைக்கு பூஜை செய்யலாம்.*



# கடகம்

புனர்பூசம் 4ஆம் பாதம்
பூசம், ஆயில்யம்

*தோரணமலை விநாயகரை வணங்குங்கள். சுதை வடிவில் இருக்கும் கிருஷ்ணரையும் கும்பிடுங்கள்.*

ஆடம்பர பொருளைக்கூட அவசியமானல் தயக்கமின்றி வாங்கும் குணம் கொண்ட கடக ராசி அன்பர்களே! நீங்கள் அன்புக்கு என்றென்றும் கட்டுப்பட்டவர்கள். இந்த குருபெயர்ச்சி உங்களுக்கு சிறப்பாக அமையும். இதுவரை குருபகவான் உங்கள் ராசிக்கு **10–**ம் இடமான மேஷ ராசியில் இருந்து பல்வேறு பிரச்சினைகளை தந்து கொண்டிருந்தார். அவர் பொருள் இழப்பையும், வறுமையயும் தந்திருப்பார். சிலர் பதவி இழக்கும் நிலைக்கு ஆளாகி இருப்பர். இந்த நிலையில் இப்போது குருபகவான் **11–**ம் இடமான ரிஷப ராசிக்கு வந்து உள்ளார். இது மிகவும் சிறப்பான இடம் ஆகும். அவர் பலவிதத்தில் வெற்றியை தந்து பொருளாதாரத்தில் முன்னேற்றம் காணச்செய்வார். மேலும் அவரின்7 மற்றும் **9–**ம் இடத்து பார்வைகள் சிறப்பாக அமைந்துள்ளது. அதன் மூலமும் பல்வேறு நன்மைகள் பெறலாம்.

தற்போது சனிபகவான் உங்கள் ராசிக்கு எட்டாம் இடமான கும்பத்தில் இருக்கிறார். எட்டாமிடம் என்பது அஷ்டமம். இதனால் உறவினர்கள் மத்தியில் பிணக்குகள் வரலாம். அலைச்சலும், பளுவும் அதிகரிக்கலாம். சிலர் தொழில் விசயமாக வெளியூர் செல்ல நேரிடலாம். இதற்காக குடும்பத்தோடு வேறு ஊரில் குடிபெயரும் நிலைகூட உருவாகலாம்.

நிழல் கிரகமான ராகு தற்போது **9–**ம் இடமான மீனத்தில் இருக்கிறார். இது சிறப்பான இடம் என்று சொல்ல முடியாது. காரியத்தில் சிற்சில தடைகளை உருவாக்கலாம். எதிரிகளின் இடையூறு தலைதூக்கும். பிறருக்கு கட்டுப்பட்டு போகும் நிலை உருவாகும். ஆனால் உங்கள் திறமையில் இருந்த பின்தங்கிய நிலை இனி இருக்காது. ராகுவுக்கு இணையான நிழல் கிரகமான கேது தற்போது **3–**ம் இடமான கன்னி ராசியில் உள்ளார். இது சிறப்பான இடம். அங்கு அவர் இறை அருளையும், பொருள் உதவியையும் கொடுப்பார். மேலும் உடல் உபாதைகளை குணமாக்குவார்.

குருவின் பலத்தால் எந்த ஒரு காரியங்களையும் வெற்றிகரமாக நிறை வேற்றலாம். பொருளாதார வளம் சிறப்பாக இருக்கும்.செல்வாக்கு மேலோங்கும். குடும்பத்தில் குதூகலத்தைக் கொடுப்பார். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளை நடத்தி வைப்பார்.அக்கம் பக்கத்தினர் உங்களை புகழ்வர். குழந்தை பாக்கியம் கிடைக்கும். சகோதரிகளால் பண உதவி கிடைக்கும். மதிப்பு,மரியாதை இருக்கும். மனதில் இருந்த உளைச்சல் அடியோடு நீங்கும். தேவையான பொருட்களை வாங்கலாம். உங்கள் மீதான பொல்லாப்பு மறையும். ஆன்மிக ஆன்றோர்களின் ஆசியும், அருளும் கிடைக்கும். புதிய வீடு–மனை வாங்க யோகம் கூடி வரும்.

தனியார்துறையில் பார்ப்பவர்களுக்கு வேலைப்பளு குறையும். பதவிஉயர்வு கிடைக்கும். விரும்பிய இடத்திற்கு மாற்றம் கிடைக்கும். சம்பள உயர்வு வரும். ஏதோ


காரணத்தால் வேலையை இழந்தவர்கள் மீண்டும் வேலை கிடைக்கப் பெறுவர். வேலையின்றி இருப்பவர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பு உண்டு.அரசு வேலையில் இருப்பவர்களுக்கு மேல்அதிகாரிகளின் ஆதரவு இருக்கும். வேலைப்பளு குறையும். வேலையில் திருப்தியும், நிம்மதியும் காண்பீர்கள். கோரிக்கைகள் நிறைவேறும். அரசு வகையில் எதிர்பார்த்த லோன் எளிதில் கிடைக்கும். பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். நன்மதிப்பை பெறலாம். ஆசிரியர்களுக்கு குருவால் கோரிக்கைகள் நிறைவேறி மகிழ்ச்சியுடன் காணப் படுவீர்கள். மருத்துவர்கள் சிறப்பான பலனை எதிர்நோக்கலாம். வக்கீல்கள் வேலையில் பொறுமையும் நிதானமும் தேவை. போலீஸ், ராணுவத்தில் பணிபுரிபவர்களுக்கு மரியாதை கிடைக்கும்.

வியாபாரிகள் குரு, கேதுவால் நல்ல லாபத்தை பெறலாம். வேலையின்றி இருப்பவர்கள் புதிய தொழிலை தொடங்கலாம். அதில் நல்ல வருமானம் கிடைக்கும். புதியவியாபாரம் ஓரளவு அனு கூலத்தை கொடுக்கும். ஆன்மிக சம்பந்தபட்ட மற்றும் பூஜை பொருள்ட்கள் வியாபாரம் செய்பவர்கள் அதிக லாபத்தை பெறுவர். பகைவர்கள் சரண் அடையும் நிலை ஏற்படும். தங்கம், வெள்ளி, வைரம் நகைகள் வியாபாரம் செய்பவர்கள் நல்ல வருமானத்தை பெறுவர். அச்சகம், பத்திரிகை, பப்ளிகேசன், கட்டுமான ஆலோசகர் போன்ற தொழில் நல்ல வளர்ச்சியை அடையும். தொழில் ரீதியாக வெளியூர் பயணம் சென்றவர்கள் வீடு திரும்புவர். பத்திரிகை தொழில், தானிய வியாபாரம், தங்கம், மற்றும் உலோக வியாபாரம் சிறப்பாக அமையும்.

கலைஞர்களுக்கு பணவரவு சிறப்பாக இருக்கும். புகழ்,பாராட்டு கிடைக்கும். புதிய ஒப்பந்தம் தாராளமாக வரும். சமூகநல சேவகர்கள், அரசியல்வாதிகள் எதிர் பார்த்த பதவி கிடைக்கும். நற்பெயரும், புகழும் கிடைக்கப் பெறுவர். மாணவர் – களுக்கு ஆசிரியர்கள் ஆலோசனை கிடைக்கும். சிலர்வெளிநாடு சென்று படிக்க வாய்ப்பு கிடைக்க பெறுவர். காலர்ஷிப் போன்றவை கிடைக்கும். விவசாயம்: கீரைவகைகள், காய்கறிகள், பயறு வகைகள், நெல், கொள்ளு, கொண்டைக் கடலை, மஞ்சள், சோளம் போன்ற பயிர்கள் மூலம் அதிக லாபத்தை காண்பர். புதிய சொத்து வாங்கும் வண்ணம் கைகூடும். கால்நடை செல்வம் பெருகும். ஆடுகள், கோழி வகையில் எதிர்பார்த்த பலனை பெறலாம்.

பெண்கள் குடும்பத்தில் முக்கிய அங்கம் வகிப்பர். சகோதரர்கள் உறுதுணையாக இருப்பர். சுபநிகழ்ச்சிகள் கைகூடும்.பிள்ளைகளால் பெருமை அடைவர். குடும்பத்தோடு புனித ஸ்தலங்களுக்கு சென்று வருவீர்கள்.உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். உடல்நலம்: ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தவர்கள் வீடு திரும்புவர். பிள்ளைகள் நலம் மேம்படும்.

*பரிகாரம்: சனி பகவானுக்கு எள் தீபம் ஏற்றி வழிபடுங்கள். சந்தர்ப்பம் கிடைக்கும் போது யானைக்கு கரும்பு கொடுங்கள். பத்திரகாளியம்மனை வழிபட்டு வாருங்கள்.*



# சிம்மம்

மகம்,பூரம்,உத்திரம்
1–ஆம் பாதம்

*தோரணமலை முருகனையும் அங்கு உள்ள சப்த கன்னியரையும் வணங்குங்கள்.*

தன்னம்பிக்கையே வாழ்கையில் முன்னேற்றத்திற்கு வழிகாட்டி என்பதை உணர்ந்துள்ள சிம்ம ராசி அன்பர்களே! இதுவரை குருபகவான் 9–ம் இடத்தில் இருந்து பல்வேறு நன்மைகளை செய்து கொண்டிருந்தார். குறிப்பாக எடுத்த காரியத்தில் பல்வேறு வெற்றிகளை தந்திருப்பார். இப்போது குருபகவான் 10–ம் இடத்திற்கு அடியெடுத்து வைத்திருக்கிறார். இது சிறப்பான நிலை என்று சொல்ல முடியாது. முன்பு போல் அவரால் நல்ல பலன்களை அள்ளிதர முடியாது. பொதுவாக 10–ம் இடத்தில் இருக்கும் குரு பகவான் பொருள் நஷ்டத்தையும், மனசஞ்சலத்தையும் ஏற்படுத்துவார். குரு சாதகமற்ற நிலையில் இருந்தாலும் அவரது 5–ம் இடத்துப் பார்வை மிக சிறப்பாக இருக்கிறது. அதன் மூலம் எந்த இடையூறையும் உடைத்தெறிந்து முன்னேற்றம் காணலாம். மேலும் 15–10–2024 முதல் 10–2–2025 வரை வக்கிரம் அடைகிறார்.அவர் வக்கிரத்தில் சிக்கும் போது கெடுபலனை தரமாட்டார் மாறாக நன்மையே தருவார். குருபகவான் வக்கிரம் அடைந்தாலும், அதாவது பின்னோக்கி நகர்ந்தாலும் ரிஷப ராசிக்குள்ளேயே இருக்கிறார்.

தற்போது சனிபகவான் உங்கள் ராசிக்கு ஏழாம் இடமான கும்பத்தில் இருக்கிறார். அவரால் குடும்பத்தில் சிற்சில பிரச்சினைகளை சந்திக்கலாம். வேலையில் பளுவும், அலைச்சலும் ஏற்படும். சிலர் தொழில் நிமித்தமாக வெளியூர் செல்ல வேண்டிய நிலை உருவாகலாம். இதற்காக குடும்பத்தை தற்காலிகமாக பிரியவேண்டியது கூட இருக்கும். ஆனாலும் மோசமான நிலைக்கு சனிபகவான் உங்களை செல்ல விடமாட்டார். மேலும் சனிபகவான் வக்கிரம் அடையும் காலத்தில் உங்களுக்கு எந்த கெடுபலனும் ஏற்படாது. மாறாக நன்மைகள் நடக்கவும் வாய்ப்பு உண்டு.

நிழல் கிரகமான ராகு தற்போது 8–ம் இடமான மீனத்தில் இருக்கிறார். இது சிறப்பான இடம் என்று சொல்ல முடியாது. அவர் உறவினர்கள் வகையில் சிற்சில பிரச்சினைகளை உருவாக்கலாம். சிலர் ஊர் விட்டு ஊர் செல்லும் நிலை உருவாகும். உங்கள் முயற்சிகளில் தடைகளையும் உருவாக்கலாம். கேது 2–ம் இடமான கன்னி ராசியில் இருக்கிறார். இது சிறப்பான இடம் அல்ல. அரசு வகையில் அனுகூலமான போக்கு இருக்காது.

குருவின் 5–ம் இடத்துப் பார்வையால் இதுவரை இருந்து வந்த பின்னடைவுகள் மறையும். இருப்பினும் பெரும்பாலான கிரகங்கள் சாதகமற்ற நிலையில் இடத்தில் இருப்பதால் வீட்டினுள்சிற்சில பிரச்சினை வரலாம். ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து போகவும். சிலரது வீட்டில் பொருட்கள் திருட்டு போகலாம். கவனம் தேவைகுருவின்பார்வை மூலம் துணிச்சல் பிறக்கும்பண வரவு இருக்கும்.தேவையான

பொருட்களை வாங்கலாம். மதிப்பு, மரியாதை சீராக இருக்கும். கேதுவின் பின்னோக்கிய 4–ம் இடத்துப் பார்வை மூலம் காரிய அனுகூலம் ஏற்படும். மகிழ்ச்சி அதிகரிக்கும். கணவன்–மனைவி இடையே அன்பு, பாசம் மேலோங்கும்.

உத்தியோகம்; தனியார் துறையில் பார்ப்பவர்களுக்கு அலைச்சல் இருக்கும். இருப்பினும் குருவின் பார்வையால் நன்மைகள் கிடைக்க பெறலாம். சக ஊழியர்கள்ஆதரவுடன் இருப்பர். வக்கீல்கள் தாங்கள் நடத்தும் வழக்குகளில் சாதகமான தீர்ப்பு கிடைக்கும். கேதுவின் பின்னோக்கிய 4–ம் இடத்துப் பார்வையால் பாதுகாப்பு தொடர்பான வேலையில் இருப்பவர்கள் முன்னேற்றத்தை காணலாம். மேல்அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். பதவி உயர்வு வந்து சேரும். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பர். விரும்பிய இடத்துக்கு மாற்றம் பெறலாம். அரசு ஊழியர்கள் வேலையில் கவனமாக இருக்கவும். உங்கள் பொறுப் புகளை தட்டிகழிக்காமல் செய்யவும். சிலருக்கு இடமாற்றம் ஏற்படலாம். வக்கீல்கள் எந்த விஷயத்திலும் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்வது சிறப்பு.பண விஷயத்தில் கவனம் தேவை. அனாவசியமாக எதிலும் தலையிடாமல் ஒதுங்கி இருக்க வேண்டும்.

வியாபாரத்தில் நம்பிக்கையுள்ள நண்பர்கள், பெரியோர்கள் ஆலோசனையுடன் முன்னேற்றம் காணலாம். வெளியூர் பயணம் சிறப்பை தரும். அச்சகம், பத்திரிகை, பப்ளிகேசன், கட்டுமான ஆலோசகர் போன்ற தொழில் நல்ல வளர்ச்சியை அடையும். அலைச்சல் அதிகரிக்கும் வெளியூர் வாசம் நிகழும். அரசிடம் எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பது அரிது. அதோடு சிலர் அரசின் மூலம் பிரச்சினைகளை சந்திக்க நேரிடலாம். 15–10–2024 முதல் 10–2–2025 வரை தங்கம்,வெள்ளி, வைர நகைகள் வியாபாரம் செய்பவர்கள் அதிக லாபத்தை பெறுவர். பெண்களை பங்குதாரராக கொண்ட நிறுவனம் நல்ல முன்னேற்றம் அடையும்.

கலைஞர்கள் காரியத்தடை. பொருள் நஷ்டம் ஏற்படலாம். பொதுநல சேவகர்கள், .அரசியல்வாதிகள் கடுமையாக உழைக்க வேண்டியது இருக்கும். மாணவர்கள் சிரத்தை எடுத்து படித்தால் தான் பலன் கிடைக்கும். குருவின்பார்வையால் கல்வியில் வெற்றி காணலாம். விவசாயம்–அதிகமாக உழைக்க வேண்டியது இருக்கும். அதிக முதலீடு செய்யாமல் குறைந்த முதலீட்டில் பயிர் செய்யுங்கள்.

பெண்களுக்கு தோழிகள் மிகவும் ஆதரவுடன் இருப்பர் குடும்பத்தாரிடம் விட்டுக் கொடுத்து போவது நல்லது.குருவின் பார்வையால் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் கைகூடும். உடல்நலம்– உஷ்ண, பித்தம், மயக்கம், சளி போன்ற உபாதைகள் வரலாம்.

*பரிகாரம்: குருபகவானுக்கு மஞ்சள் நிற பூக்களால் அர்ச்சனை செய்யுங்கள். நாக தேவதையை வணங்கி வாருங்கள். துர்க்கை வழிபாடு நடத்துங்கள். ஞாயிற்றுக் கிழமைகளில் ராகுகாலத்தில் பைரவரை வணங்கி வாருங்கள்.*



# கன்னி

உத்திரம்2ஆம்பாதம் முதல்
அஸ்தம்,சித்திரை2ஆம்பாதம் முடிய

*தோரணமலையில் உள்ள நவக்கிரகங்களை சுற்றி வாருங்கள். சுதை வடிவில் இருக்கும் சிவபெருமானை வணங்குங்கள்.*

பிறரிடம் நல் அன்பை வெளிப்படுத்தும் கன்னி ராசி அன்பர்களே! நீங்கள் மென்மையான குணம் கொண்டவர்கள். உங்களது பண்பும், பணிவும், நேர்மையும் எல்லோரையும் மிக எளிதில் கவரும்.குருபகவான் இதுவரை உங்கள் ராசிக்கு 8–ம் இடத்தில் இருந்து வந்தார். இது சிறப்பான நிலை அல்ல என்று சொல்வதை விட கொடூரமான நிலை என்றே சொல்லலாம். 8–ல் குரு இருக்கும் போது பல்வேறு இன்னல்களை தந்திருப்பார். குறிப்பாக மனவேதனை அதிகமாக உங்களை வாட்டியிருக்கும். பொருளாதாரத்தில் திடீர் சரிவுகள் ஏற்பட்டிருக்கும். உறவினர்கள், நண்பர்கள் அனுகூலமாக இருந்திருக்க மாட்டார்கள். வீண் விரோதம் உருவாகி–யிருக்கலாம். இந்த நிலையில் குருபகவான் 9–ம் இடமான ரிஷப ராசிக்கு செல்கிறார். இது மிகச்சிறப்பான இடம். இதுவரை அவரால் பட்ட இன்னல்களில் இருந்து விடுபடுவீர்கள். அவரால் மனமகிழ்ச்சி அதிகரிக்கும். உற்சாகம் பிறக்கும். நினைத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிக்கலாம். பணப்புழக்கம் அதிகரிக்கும். தேவைகள் பூர்த்தி ஆகும். குடும்பத்தில் இருந்து வந்த பின்னடைவுகள் மறையும். தம்பதியினர் இடையே ஒற்றுமை மேம்படும். உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். உங்களை புரிந்து கொள்ளாமல் இருந்தவர்கள் உங்கள் மேன்மையை அறிந்து சரணடையும் நிலை வரலாம். தடைபட்டு வந்த திருமணம் நடக்க வாய்ப்பு உண்டு. இவை அனைத்தும் குருவால் கிடைக்கும் நற்பலன்கள். இது தவிர குருவின் 9–ம் இடத்துப் பார்வையும் சிறப்பாக இருக்கும். இதன் மூலமும் நற்பலன்கள் கிடைக்கும்.

சனிபகவான் 6–ம் இடமான கும்ப ராசிராசியில் இருக்கிறார். உங்கள் முயற்சியில் வெற்றி கிடைக்கும்.இதனால் தொழிலில் பல சாதனைகளை படைக்கலாம். வருமானம் அதிகரிக்கும். பகைகளின் சதி எடுபடாமல் போகும். அதோடு அவர்கள் உங்களிடம் வந்து சரண் அடையும் நிலையும் ஏற்படலாம். குடும்ப நிலைமையும் மேம்படும். சனிபகவானின்10–ம் இடத்துப்பார்வை மூலம் காரிய அனுகூலத்தையும், பொருளாதார வளத்தையும் பெறலாம். தொழிலிலும் சிறப்பு காணலாம்.

தற்போது ராகு 7–ம் இடமான மீனத்தில் இருக்கிறார். இது சிறப்பான இடம் என்று சொல்ல முடியாது. இங்கு அவரால் இடப்பெயர்ச்சியையும், அவப்பெயரையும் சந்திக்க நேரலாம். சிலர் கெட்டவர்களோடு சேரும் சூழ்நிலை உருவாகும். யாரிடமும் கவனமாக பழகவேண்டும். கேது தற்போது உங்கள் ராசியில் இருக்கிறார். இது சிறப்பான இடம் அல்ல. அவர் காரிய தடையையும், உடல் உபாதையையும் தரலாம்.

குரு, சனிபகவானின் பலத்தால் சிறப்பாக இருக்கும். தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிக்கலாம். உங்கள் மீதான


பொல்லாப்பு மறையும். குரு,சனிபகவானின் பார்வையால் மகிழ்ச்சியும், ஆனந்தமும் அதிகரிக்கும். பெண்கள் மிக உறுதுணையாக இருப்பர். பணவிரயம் மறைந்து பொருளாதாரத்தில் ஒருபடி மேலோங்கலாம். இருக்கமான நிலை மாறும். நீண்ட நாட்களாக தடைபட்டு வந்த திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் கைகூடும்.கணவன்–மனைவி இடையே அன்பு பெருகும். குழந்தை பாக்கியம் கிடைக்கும்.வீடு,மனை வாங்கும் யோகம் கூடி வரும். சகோதரிகள் மூலம் உதவி கிடைக்கும்.உறவினர்கள் வருகையும் அவர்களால் நன்மையும் கிடைக்கும். பக்தி உயர்வு மேம்படும். புனித ஸ்தலங்களுக்கு சென்று வருவீர்கள்.

தனியார் துறையில் வேலை பார்ப்பவர்களுக்கு மேல் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்க வாய்ப்பு உண்டு. சகஊழியர்களின் ஒத்துழைப்பு இருக்கும். கோரிக்கைகள் நிறைவேறும். விரும்பிய இடத்துக்கு மாற்றம் கிடைக்கும்.ஆசிரியர்கள் மேன்மை காண்பர். முக்கிய கோரிக்கைகளை வைக்கலாம். மருத்துவர்களுக்கு உங்கள் திறமை பளிச்சிடும். அதற்குரிய வருமானமும் வரும். வக்கீல்களுக்கு வழக்குகள் சிறப்பாக இருக்கும். தாங்கள் நடத்தும் வழக்குகளில் சாதகமான தீர்ப்பு கிடைக்கும்.

வியாபாரத்தில் முன்னேற்றம் காணலாம். அச்சகம், பத்திரிகை, பப்ளிகேசன், கட்டுமான ஆலோசகர் போன்ற தொழில் நல்ல வளர்ச்சியை அடையும். தங்கம், வெள்ளி, வைர நகைகள் வியாபாரம் செய்பவர்கள் அதிக லாபத்தைப் பெறுவர். வாடிக்கையாளர் மத்தியில் நற்பெயர் கிடைக்கும். பெண்களை பங்குதாரராக கொண்ட நிறுவனம் நல்ல முன்னேற்றம் அடையும். ஆன்மிக சம்பந்தபட்ட மற்றும் பூஜை பொருள்ட்கள் வியாபாரம் செய்பவர்கள் அதிக லாபத்தை பெறுவர்.

கலைஞர்களுக்கு புகழ், பாராட்டு வந்து சேரும். பொதுநல சேவகர்கள், அரசியல்வாதிகள் எதிர்பார்த்த பதவி கிடைக்கும். மாணவர்களுக்கு ஆசிரியர்களின் அறிவுரை கிடைக்கும். அதிக வளர்ச்சியை எதிர்நோக்கலாம். காலர்ஷிப் போன்றவை கிடைக்கும். விவசாயிகள்: மஞ்சள், பயறு வகைகள், துவரை, கொண்டைக்கடலை, சோளம், தக்காளி, பழவகைகள் மூலம் நல்ல வருவாய் காணலாம். கால்நடை செல்வம் பெருகும். பெண்கள் நல்ல வசதியோடு காணப்படுவர். சுற்றுலா, விருந்து, விழா என சென்று வருவீர்கள். திருமணம் ஆகாமல் இருக்கும் பெண்களுக்கு திருமணம் கைகூடும் அதுவும் நல்ல வரனாக அமையும். குழந்தைகளால் மகிழ்ச்சி காண்பீர்கள். புதிய நகை, ஆடைகள் போன்றவை கிடைக்கும். உடல்நலம் சிறப்பாக இருக்கும். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தவர்கள் வீடு திரும்புவர்.

*பரிகாரம்: பாம்பு புற்றுள்ள கோவிலுக்கு சென்று பால் ஊற்றுங்கள். ஞாயிற்றுக் கிழமைகளில் ராகு காலத்தில் துர்க்கை மற்றும் பைரவருக்கு பூஜை செய்யலாம். ஏழைகளுக்கு உளுந்து தானம் செய்யுங்கள்.*



# துலாம்

சித்திரை3,4 ஆம்பாதம்,சுவாதி, விசாகம்1,2,3ஆம்பாதம் முடிய

*தோரணமலை முருகனையும் மலைமீதுள்ள முருகன் பாதத்தையும் வணங்குங்கள்.*

துலாக்கோல் போல் எப்பக்கமும் சாயாமல் நீதியின் பக்கம் நிற்கும் துலாம் ராசி அன்பர்களே! நீங்கள் மனதில் பட்டதை பளிச்சென்று சொல்வீர்கள். சிறந்த நண்பர்களையும், நல்ல உறவினர்களையும் பெற்றிருப்பீர்கள். இது வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 7–ம் இடத்தில் இருந்து பல்வேறு நன்மைகளை செய்து கொண்டிருந்தார்.உங்கள் செல்வாக்கு உயர்ந்திருக்கும். நினைத்ததை நிறைவேற்றி இருப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரித்திருக்கும். தேவைகள் பூர்த்தியாகி இருக்கும். பொருளாதார வளம் மேம்பட்டிருக்கும். வீடு,மனை வாங்கி இருப்பீர்கள். அல்லது வசதியான வீட்டிற்கு குடிபுகுந்து இருப்பீர்கள். சிலர் வாகனம் வாங்கி இருக்கலாம். இந்த நிலையில் இப்போது குரு 8–ம் இடத்திற்கு அடியெடுத்து வைக்கிறார். இது அவ்வளவு சிறப்பான நிலை அல்ல. 8–ம் இடத்தில் இருக்கும் குருபகவான் பொதுவாக மன வேதனையும், நிலையற்ற தன்மையும் கொடுப்பார். பொருளாதார சரிவை ஏற்படுத்துவார். வீண் விரோதத்தை உருவாக்குவார். பல்வேறு தொல்லைகளை கொடுப்பார் என்பது பொதுவான ஜோதிட வாக்கு. ஆனால் இதனை கண்டு நீங்கள் அஞ்ச வேண்டாம். குரு சாதகமற்ற நிலையில் இருந்தாலும் அவரது 7–ம் இடத்து பார்வை உங்களுக்கு சாதகமாக உள்ளது. அந்த வகையில் உங்களுக்கு எந்த இடையூறுகள் வந்தாலும் அதை குருவின் பார்வை முறியடித்து வெற்றிக்கு வழிவகுக்கும். எனவே குரு சாதகமற்ற நிலையில் இருக்கிறாரே என்று நீங்கள் கவலை கொள்ள வேண்டாம். மேலும் அவர் 15–10–2024 முதல் 10–2–2025 வரை வக்கிரம் அடைகிறார். அவர் வக்கிரத்தில் சிக்கும் போது கெடுபலனை தரமாட்டார் மாறாக நன்மையே தருவார்.

சனிபகவான் உங்கள் ராசிக்கு 5–ம் இடமான கும்பத்தில் இருக்கிறார். 5–ம் இடத்தில் இருக்கும் சனிபகவானால் முழுநன்மையை தரஇயலாது. சனிபகவான் தான் இருக்கும் இடத்தில் இருந்து சுமாரான பலனை தந்தாலும் அவர்தன் ஏழாம் இடத்துப்பார்வையால் எண்ணற்ற நன்மைகளை அள்ளித்தர காத்திருக்கிறார். இதனால் பொன் பொருளை அள்ளி வழங்குவார். குடும்பத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்துவார். ஆனந்தமயமாக வாழ்வைத் தருவார். பெண்களால் எதிர்பாராத முன்னேற்றம் கிடைக்கும்.

ராகு தற்போது 6–ம் இடமான மீனத்தில் இருக்கிறார்.இது சிறப்பான இடம். அவர் உங்களை தீயோர் சேர்க்கையில் இருந்து விடுவித்து முன்னேற்றத்துக்கு வழிவகுப்பார். காரிய அனு–கூலத்தைக் கொடுப்பார். கேது தற்போது 12–ம் இடமான கன்னி ராசியில் இருக்கிறார். இது சிறப்பான இடம் என்று சொல்ல முடியாது. இவரால் பொருள் விரையம் ஏற்படலாம்.

குடும்பத்தின் தேவைகள் பூர்த்தியாகும். பண வரவுக்கு தகுந்தாற்போல் செலவும் இருக்கும்.வீண் வாக்கு வாதத்தில் ஈடுபட வேண்டாம். இருப்பினும் குருவின்7–ம் இடத்துப் பார்வையால் எந்த பிரச்சினையையும் முறியடித்து வெற்றிக்கு வழிகாணலாம். மேலும் சனிபகவானின் 7–ம் இடத்துப் பார்வையால் முயற்சிகளில் வெற்றியை தருவார். உங்கள் ஆற்றல் மேம்படும். அக்கம் பக்கத்தினர்களின் சதியை முறியடிக்கும் வல்லமையை பெறுவீர்கள்.

உத்தியோகத்தில் பளுவும், அலைச்சலும் இருக்கும். குருவின்பார்வையால் வழக்கமாக கிடைக்க வேண்டிய சம்பளஉயர்வு, பதவிஉயர்வுக்கு தடையேதும் இல்லை. மேல்அதிகாரிகளின்ஆதரவு இருக்கும் உங்கள் திறமைக்கு உகந்த மரியாதை கிடைக்கும். ஆசிரியர்களுக்கு பளுவும் அலைச்சலும் வரும். வக்கீல்கள் எந்த விஷயத்திலும் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்வது சிறப்பு. போலீஸ், ராணுவத்தில்பணிபுரிபவர்களுக்கு வேலையில் எந்தவித தொய்வும் இருக்காது. வேலைப்பளு, வீண் மனக்கவலை மறையும். 15–10–2024 முதல் 10–2–2025 வரை ஆசிரியர்களுக்கு பதவி, சம்பள உயர்வுக்கு தடை ஏதும் இல்லை. வக்கீல்களுக்கு தாங்கள் நடத்தும் வழக்குகள் சிறப்பாக இருக்கும். மருத்துவர்களுக்கு நல்ல பெயரும், மதிப்பும் கிட்டும். ஐ.டி. துறையில் வேலை நிமித்தமாக குடும்பத்தை விட்டு பிரிந்து சென்றவர்கள் ஒன்று சேருவர்.

வியாபாரம் இருப்பதை சிறப்பாக நடத்துவதே சிறப்பு. பணவிரையம் ஏற்படலாம். வாடிக்கையாளரை அதிக முயற்சி எடுத்து தக்கவைக்க வேண்டியது இருக்கும். குடும்ப பிரச்சினையை தொழிலில் காட்டாமல் இருந்தால் நல்ல முன்னேற்றம் அடையலாம். கலைஞர்களுக்கு வெளியூர் வாசம் நிகழும். அரசியல்வாதிகள், பொதுநல சேவகர்கள் முன்னேற்றம் காணலாம். முக்கிய பொறுப்பு கிடைக்க வாய்ப்பு உள்ளது. மாணவர்கள் அசட்டையாக இருந்து விட வேண்டாம். குருவின் பார்வையால் தேர்வுகள் சிறப்பாக எழுதுவீர்கள்.விவசாயம் சீராக இருக்கும். உழைப்பே உங்கள் முதலீடு. புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி சிறப்பான மகசூலை பெறுவர்.

பெண்கள் குடும்பத்தாரிடம் விட்டுக் கொடுத்து போவது நல்லது. இல்லையென்றால் வீண்மன உளைச்சலுக்கு ஆளாவீர்கள். நகை–ஆபரணங்கள் வாங்கலாம்.உடல் நலனை பொறுத்தவரை கேதுவால் சிற்சில உபாதைகள் வந்தாலும் பாதிப்புகள் ஏற்படாது.



*பரிகாரம்– ஆலங்குடி, திருச்செந்தூர், திட்டக்குடி, பட்டமங்கலம் போன்ற ஏதாவது ஒரு குருத்தலத்திற்கு சென்று வாருங்கள். விநாயகரையும், ஆஞ்சநேயயையும் வழிபட்டு வாருங்கள். செவ்வாய்கிழமை துர்க்கை அம்மனை வழிபட்டு ஏழைகளுக்கு சிவப்பு ஆடை தானம் கொடுக்கலாம்.*





## விருச்சிகம்

விசாகம் 4ஆம் பாதம், அனுஷம்,கேட்டை

*தோரணமலை விநாயகரையும், சுதை வடிவில் இருக்கும் கிருஷ்ணரையும் வணங்குங்கள்*

விருச்சிக ராசியின் சின்னம் தேள். அதனை யாரும் சீண்டாதவரை அதனால் யாருக்கும் எந்த பாதிப்பும் இருக்காது. ஆனால் சீண்டினால் கொட்டிவிடும். அதே போல் உங்களுக்கு யாரேனும் தீங்கு செய்துவிட்டால் அதனை ஒருபோதும் மறக்காத குணம் கொண்டவர்கள் நீங்கள். குருபகவான் இதுவரை உங்கள் ராசிக்கு 6–ம் இடத்தில் இருந்தார். அவர் மன நிம்மதியை இழக்க செய்திருப்பார். உங்கள் நிலையில் இருந்து தடுமாற்றத்தை உண்டு பண்ணியிருப்பார். பொருளாதார சரிவு ஏற்பட்டிருக்–கும்.வீண் பகையும், விரோதமும் உருவாகியிருக்கும். பல்வேறு தொல்லை–களைஅனுபவித்து இருப்பீர்கள்.இப்போது குரு 6–ம் இடத்தில் இருந்து 7–ம் இடத்திற்கு செல்வது மிகவும் உயர்வான நிலை. மேலும் குருவின் 5–ம் இடத்துப் பார்வையும் சிறப்பாக உள்ளது. எனவே குரு குடும்பத்தில் மகிழ்ச்சியை அதிகரித்து சுப நிகழ்ச்சியை தருவார். செல்வாக்கு மேம்படும். பணப்புழக்கம் அதிகரிக்கும். தேவைகள் பூர்த்தியாகும். எண்ணற்ற பலவசதிகள் கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு உயர்வை தருவார்.

சனிபகவான் இப்போது நான்காம் இடமான கும்ப ராசியில் இருகிக்றார். இந்த இடத்திற்கு அர்த்தாஷ்டம் என்று பெயர். இந்த இடத்தில் அவரால் நன்மை செய்ய முடியாது. அவரால் குடும்பத்தில் சிற்சில குழப்பங்கள் வரலாம். சிலர் தொழில் ரீதியாக குடும்பத்தை விட்டு தற்காலிகமாக பிரிந்து செல்ல வேண்டிய நிலை உருவாகலாம். மனக்குழப்பத்தில் தொழிலைக்கூட சிறப்பாக நடத்த முடியாதாவராகலாம்.

சனிபகவானின் 3–ம் இடத்துப்பார்வையால் மூலம் எடுத்த காரியத்தில் வெற்றியைத் தருவார். இதனால் நல்ல பொருளாதார வளம் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியையும் ஆனந்தத்தையும் கொடுப்பார். தொழிலிலும் விருத்தியை தருவார். வருமானத்தைப் பெருக்குவார்.

தற்போது ராகு உங்கள் ராசிக்கு 5–ம் இடமான மீனத்தில்இருக்கிறார். இது சிறப்பான இடம் அல்ல.அவர் இன்னல்களையும், இடையூறுகளையும் தரலாம். குழப்பத்தை உருவாக்கலாம். கேது உங்கள் ராசிக்கு 11–ம் இடமான கன்னி ராசியில் இருக்கிறார். இது சிறப்பான இடம்.அவர் நல்ல வளத்தையும் நல்ல ஆரோக்கியத்தையும் கொடுப்பார். குடும்பத்தில் மேன்மையை கொடுப்பார். எடுத்த காரியத்தை வெற்றிகரமாக முடிக்கும் ஆற்றலையும் அவர் கொடுப்பார். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

குரு,கேதுவின் பலத்தால் பொருளாதார வளம் அதிகரிக்கும். உங்கள் முயற்சிகளில் இருந்து வந்த தடைகள் அகலும். உங்கள் ஆற்றல் மேம்படும்.தேவைகள் பூர்த்தியாகும்.

உறவினர் வகையில் இருந்து வந்த வீண் பகை மறைந்து உங்களுக்கு உதவிகரமாக இருப்பர். நல்ல பணப்புழக்கம் ஏற்படும். பகைவர்களின் தொல்லையில் சிக்கி அலைக்கழிந்தவர்கள் இனி தைரியமாக செயல்படும் ஆற்றல் பெறுவீர்கள். வண்டி, வாகனங்கள் வாங்கலாம். உங்கள் மீதான அவப்பெயர் மறையும். புதிய வீடு மனை வாங்கலாம். சிலர் வசதியான வீட்டிற்கு குடிபோகும் வாய்ப்பு கிட்டும். வீட்டில் மங்களகரமான சூழ்நிலை உருவாகும். சிலர் குழந்தை பாக்கியம் பெறுவர். உறவினர்கள் மத்தியில் நல்ல செல்வாக்கு இருக்கும். திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் அனைத்தும் நடந்தேறும். அதுவும் நல்ல வரனாக அமையும். பெண்கள் மிகவும் ஆதரவுடன் இருப்பர்.

உத்தியோகம்: நல்ல முன்னேற்றம் காணலாம்.உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். பதவிஉயர்வு, சம்பள உயர்வு போன்றவை கிடைக்கும். உங்களை எதிர்த்தவர்கள் உங்கள் நிலைமையை புரிந்து அனுசரணையுடன் நடப்பர். போலீஸ், ராணுவத்தில் பணிபுரிபவர்கள் மேன்மை காண்பர். வக்கீல்களுக்கு தாங்கள் நடத்தும் வழக்குகளில் சாதகமான தீர்ப்பு கிடைக்கும். ஆசிரியர்ககள் சிறப்பான முன்னேற்றத்தை காணலாம். அவர்கள் தங்கள் கோரிக்கைகளை கேட்டு பெற்று கொள்ளவும். சகஊழியர்கள் உதவிகரமாக இருப்பர்.

வியாபாரத்தில் இருந்து வந்த பின்னடைவுகள் மறையும். கூட்டாளிகள் இடையே ஒற்றுமை மேம்படும். எதிரிகளால் இருந்து வந்த முட்டுக்கட்டைகள் விலகும். கம்ப்யூட்டர், அச்சுத்தொழில், இயந்திர தொடர்பான தொழில் போன்றவை நல்ல வளர்ச்சி அடையும். தங்கம்,வெள்ளி, வைரம் நகைகள் வியாபாரம் செய்பவர்கள் அதிக வருமானத்தைக் காணலாம். புதிய வியாபாரம் ஓரளவு லாபத்தைத் தரும். கூட்டாளிகள் இடையே ஒற்றுமை ஏற்படும். அரசு வகையில் எதிர்பார்த்த அனுகூலம் கிடைக்கும்.

கலைஞர்கள்:பாராட்டுகள்,விருதுகள் கிடைக்கும். சமூகநலசேவகர்கள் ,அரசியல்வாதிகள் சமூகத்தில் ஒரு அந்தஸ்க்கு உயர்த்தப்படுவர். மாணவர்கள்: குருவால் ஆசிரியர்களின் அறிவுரை பயன் உள்ளதாக இருக்கும். போட்டி, பந்தயங்களில் வெற்றி பெறுவர். விவசாயம் நெல்,சோளம் ,கொள்ளு, துவரை போன்ற வகைகளில் அதிக மகசூல் கிடைக்கும். கோழி, ஆடு வளர்ப்பில் நல்ல வருமானத்தை பெறுவர். பெண்கள்: பொன்,பொருள் வந்து சேரும். மிகவும் சிறப்பான நிலையில் இருப்பர். சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். சகோதரிகள் மிகவும் ஆதரவுடன் இருப்பர். உடல்நலம் சிறப்பாக இருக்கும்.

*பரிகாரம்: சனி மற்றும் ராகு இருப்பிடம் சிறப்பானது அல்ல என்பதால் நீங்கள் சந்தர்ப்பம் கிடைக்கும் போது அவர்களுக்கு பரிகாரம் செய்யுங்கள். காக்கைக்கு அன்னமிட்டு சாப்பிடுங்கள்.*

# தனுசு

மூலம்,பூராடம்,உத்திராடம்
1ஆம் பாதம் முடிய

*தோரணமலை முருகனையும் அங்கு உள்ள லட்சுமி, சரஸ்வதியையும் வழிபடுங்கள்*

தனுசுவின் சின்னம் வில்–அம்பு. வில்லில் இருந்து ஏவப்படும் அம்பானது குறிப்பிட்ட குறியை நோக்கி செல்வது போல் உங்கள் குறிக்கோளும் அங்கிங்கு சிதாறதபடி நேர்கோட்டில் இருக்கும். உங்களின் குறி பெரும்பாலும் தப்பாது. குரு பகவான் இதுவரை குருபகவான் உங்கள் ராசிக்கு 5–ம் இடத்தில் இருந்து பல்வேறு நன்மைகளை செய்தார். அவரால் குடும்பம் மேம்பட்டிருக்கலாம். நல்ல பணப் புழக்கத்தை தந்திருப்பார். திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகளை நடத்தி வைத்திருப்பார். பிள்ளைகளால் பெருமை கிடைத்திருக்கும். பெண்களால் எண்ணற்ற முன்னேற்றத்தை அடைந்திருப்பீர்கள்.

இந்த நிலையில் இப்போது குரு பெயர்ச்சி நடக்கிறது. குரு பகவான் உங்கள் ராசிக்கு 5–ம் இடத்தில் இருந்து 6–ம் இடத்திற்கு அடியெடுத்து வைக்கிறார். இது சாதகமான நிலை என்று சொல்ல முடியாது. பொதுவாக 6–ம் இடத்தில் இருக்கும் குரு உடல்நலத்தை பாதிப்புக்குள்ளாக்குவார். மனதில் தளர்ச்சியை ஏற்படுத்துவார் என்பது ஜோதிட வாக்கு. ஆனாலும் அதற்காக கவலை கொள்ள வேண்டாம். குரு சாதகமற்ற நிலையில் இருந்தாலும் அவரது 9–ம் இடத்து பார்வை மிகவும் சாதகமாக காணப்படுகிறது. குருவின் பார்வை மூலம் எந்த இடையூறுகளையும் தடுத்து நிறுத்தலாம். மேலும் அவர் 15–10–2024 முதல் 10–2–2025 வரை வக்கிரம் அடைகிறார். அவர் வக்கிரத்தில்சிக்கும் போது கெடுபலனை தரமாட்டார் மாறாக நன்மையே தருவார்.

இப்போது சனிபகவான் உங்கள் ராசிக்கு மூன்றாம் இடமான கும்பத்தில் இருக்கிறார். இது மிக சிறப்பான இடமாகும். வரவுகள் எல்லாம் நல்லபடியாக வந்த கொண்டே இருக்கும். காரிய அனுகூலம் ஏற்படும். வியாபாரம் உள்பட எல்லா தொழில்களிலும் பின்தங்கிய நிலை மாறி சிறப்பான முன்னேற்றத்தைக் காணலாம். குடும்பத்தில் நல்ல அனுகூலங்கள் ஏற்படும். திருமணம் கைகூடும். சிலர் கட்டத்தொடங்கிய வீடு மற்றும் கட்டிடங்கள் பாதியில் நின்றதை துரிதப்படுத்தப்பட்டு விரைவாக முடிக்கலாம்.

ராகு 4–ம் இடமான மீனத்தில் இருக்கிறார். இந்த இடம் ராகுவுக்கு சாதகமானது அல்ல என்பதால் அலைச்சலையும்,சிற்சில பிரச்சினையையும் உருவாக்கலாம். கேது 10–ம் இடமான கன்னி ராசியில் இருக்கிறார்.இது சிறப்பானது என்று சொல்லமுடியாது. இங்கு அவர் உடல் உபாதைகளை தரலாம். எதிரிகளின் தொல்லை ஏற்படும். சிலரது வீட்டில் பொருட்கள் களவு போக வாய்ப்பு உண்டு.

சனிபகவானால் உங்களது ஆற்றல் மேம்படும். மேலும் குருவின் 9–ம் இடத்து பார்வையால் துணிச்சல் பிறக்கும். பணவரவு கூடும். தேவையான பொருட்களை

வாங்கலாம். பகைவர்களின் சதி உங்களிடம் எடுபடாது. அவர்கள் சரண் அடையும் நிலை ஏற்படும்.

குடும்ப பெரியோர்களின் ஆலோசனையும், அறிவுரையும் உங்களுக்கு உறுதுணையாக இருக்கும். **15–10–2024** முதல் **10–2–2025** வரை குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். பெண்களின் ஆதரவு இருக்கும். சகோதரிகளால் பண உதவி கிடைக்கும். சொந்த பந்தங்கள் வருகை இருக்கும். புதிய வீடு–மனை வாகனம் வாங்க யோகம் கூடி வரும். திருட்டு, களவு பயம் இருக்காது.


உத்தியோகம்: வேலையில் அலைச்சல் இருக்கும்.மேல் அதிகாரிகளிடம் அனுசரித்து போகவும். சிலர் வேலை நிமித்தமாக குடும்பத்தைவிட்டு தற்காலிகமாக பிரியவேண்டிய திருக்கும். பாதுகாப்பு தொடர்பான வேலையில் இருப்பவர்கள் சிலருக்கு எதிர்பாராத வகையில் மாற்றம் ஏற்படலாம். சம்பளஉயர்வு, பதவிஉயர்வு போன்றவை கிடைக்கும். சகபெண் ஊழியர்கள் மிகவும் ஆதரவுடன் இருப்பர். வக்கீல்களுக்கு தாங்கள் நடத்தும் வழக்குகளில் சாதகமான தீர்ப்பு கிடைக்கும்.

வியாபாரம்: உழைப்புக்கு தகுந்த லாபம் இருக்கும். பகைவர்களின் இடையூறு அவ்வப்போது தலைதூக்கினாலும் அதை எளிதில் முறியடிப்பீர்கள். தொழில் ரீதியாக வெளியூர் பயணம் ஏற்படலாம்.நம்பிக்கையுள்ள நண்பர்கள், பெரியோர்கள் ஆலோசனையுடன் தொழிலில் முன்னேற்றம் காணலாம். கட்டுமான ஆலோசகர் தொழில் நல்ல வளர்ச்சியை அடையும். பண விஷயத்தில் எப்போதும் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.**15–10–2024** முதல் **10–2–2025** வரை எதிரிகளால் இருந்து வந்த முட்டுக்கட்டைகள் விலகும்.

கலைஞர்கள்:புதிய ஒப்பந்தங்கள் கிடைக்க அதிக முயற்சி எடுக்க வேண்டியதிருக்கும். அரசியல்வாதிகள், சமூகநல தொண்டர்கள் பிரதிபலனை எதிர்பார்க்காமல் உழைக்க வேண்டியதிருக்கும்.மாணவர்கள்:அயராது உழைக்க வேண்டியதிருக்கும்.உங்கள் முயற்சிக்கு தகுந்த பலன் கிடைக்கும். **15–10–2024** முதல் **10–2–2025** வரை முன்னேற்றம் காணலாம். காலர்ஷிப் போன்றவை கிடைக்கும். தேர்வுகள் சிறப்பா எழுதுவீர்கள்.விவசாயிகள் அதிக முதலீடு போடும் விவசாய பயிரை தவிர்க்கவும்.அதிகமாக உழைக்க வேண்டியதிருக்கும்.

பெண்கள்: கணவரிடம் விட்டுக் கொடுத்து போவது நல்லது. உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். பிள்ளைகளால் பெருமை கிடைக்கும். குருவின் **9–ம்** இடத்து பார்வையால் துணிச்சல் பிறகும். அக்கம் பக்கத்தினர்களின் தொல்லையில் இருந்து விடுபடுவர். தோழிகள் உதவிகரமாக இருப்பர். உடல்நலம் பித்தம், மயக்கம் போன்ற உபாதைகள் வரலாம்.

*பரிகாரம்–வியாழக்கிழமை சிவனை வழிபடுங்கள். செவ்வாய்,வெள்ளி கிழமைகளில் முருகனை வழிபட்டு வாருங்கள். ஏழைகளுக்கு உளுந்து, கொள்ளு தானம் செய்யுங்கள்.*



## மகரம்

உத்திராடம்2,3,4ஆம்பாதம்,திருவோணம், அவிட்டம்1,2ஆம் பாதம்

*தோரணமலை விநாயகரையும் அங்கு உள்ள சப்த கன்னியரையும் வணங்குங்கள்.*

சுயகவுரவம் கொண்ட மகர ராசி அன்பர்களே! மனைவி மற்றும் தன் குடும்பத்தினர் மீது அதிக அன்பும், பாசமும் கொண்டவர்கள் நீங்கள். இது வரை குரு பகவான் உங்கள் ராசிக்கு 4–ம் இடத்தில் இருந்து பல்வேறு இன்னலை தந்திருப்பார். அவர் குடும்பத்தில் பல பிரச்சினைகளை உருவாக்கி இருப்பார். தூரத்து உறவினர் வகையில் விரும்பதகாத சம்பவங்களும் நடந்து இருக்கலாம். இந்த நிலையில் இப்போது குருபகவான் உங்கள் ராசிக்கு 5–ம் இடத்துக்கு செல்கிறார். இது மிகவும் சிறப்பான நிலை. குடும்பத்தில் மகிழ்ச்சியைத் தருவார். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளை நடத்தி வைப்பார். பொருளாதார வளத்தை அதிகரிக்க செய்வார். பெண்களால் மேன்மை கிடைக்கும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். இதனால் வாழ்க்கையில் வளம் காணலாம். மேலும் அவரது 5,7–ம் இடத்துப் பார்வைகள் சாதகமாக அமையும். இதனால் மேலும் நன்மைகள் அதிகரிக்கும்.

இப்போது சனிபகவான் உங்கள் ராசிக்கு 2–ம் இடமான கும்ப ராசியில் இருக்கிறார். இது எழரை சனியின் இறுதி நிலை. பொதுவாக சனிபகவான் 2–ம் இடத்தில் இருக்கும் போது குடும்பத்தில் சிற்சில பிரச்சினைகளை சந்திக்கலாம். பணவிரயம் இருக்கும். சிலர் பொருட்களை களவு கொடுக்க நேரிடலாம்.

சனிபகவானின் 10–ம் இடத்துப்பார்வை மூலம் பொனும் பொருளும் கிடைக்கும். குடும்பத்தில் சிற்சில பிரச்சினைகள் வந்தாலும் மகிழ்ச்சிக்கு குறை இருக்காது. பெண்களால் நன்மை கிடைக்கும்.

நிழல் கிரகமான ராகுபகவான் தற்போது 3–ம் இடமான மீனத்தில் இருக்கிறார். இது சிறப்பான இடம். அங்கு அவர் காரியஅனுகூலத்தையும், பொருளாதார வளத்தையும், குடும்பத்தில் மகிழ்ச்சியையும், தொழில் விருத்தியையும் தருவார்.

இன்னொரு நிழல் கிரகமான கேது தற்போது 9–ம் இடமான கன்னி ராசியில் உள்ளார். அங்கு அவர் நன்மை தரமாட்டார். அவரால் முயற்சிகளில் தோல்வி ஏற்படும். பொருள் நஷ்டம் வரலாம்.உடல் ஆரோக்கியம் குறையலாம். பயணத்தின் போது சற்று கவனம் தேவை.

உங்களது ஆற்றல் மேம்படும். இதுவரை இருந்த மந்த நிலை மாறும். துணிச்சல் பிறகும். பண வரவு கூடும். சுபநிகழ்ச்சிகள் கைகூடும். தேவையான பொருட்களை வாங்கலாம். உங்கள் மீதான பொல்லாப்பு மறையும். ஆன்மிக ஆன்றோர்களின் ஆசியும், அருளும் கிடைக்கும். முன்னேற்றமான சம்பவங்கள் நடக்கும். பொருள் சேரும். கணவன்–மனைவிஇடையே அன்பு இருக்கும்.பிள்ளைகளால் பெருமை கிடைக்கும். மேலும் குருவின் 5,7–ம் இடத்துப்பார்வைகள் மூலம் உங்கள் செல்வாக்கு உயரும். குதூகலத்தை கொடுப்பார். உற்சாகம் பிறக்கும். நினைத்த காரியத்தை

வெற்றிகரமாக செய்து முடிக்கலாம். பணப்புழக்கம் அதிகரிக்கும். தேவைகள் பூர்த்தி ஆகும். உறவினர்கள் உதவிகரமாக இருப்பர்.

கேதுவின் பின்னோக்கிய 4–ம் இடத்துப் பார்வையால் உங்களுக்கு அபார ஆற்றல் பிறக்கும். நகை–ஆபரணங்கள் வாங்கலாம்.7–ம் இடத்துப் பார்வையால் தெய்வ அனுகூலம் தொடர்ந்து கிடைக்கும்.11–ம் இடத்துப் பார்வையால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.புதிய வீடு–மனை வாகனம் வாங்கலாம்.

உத்தியோகம்: வேலைப்பளு குறையும். உங்கள் திறமை பளிச்சிடும். எதிர்பார்த்த பதவி கிடைக்கும். வேலையின்றி இருப்பவர்களுக்கு வேலை கிடைக்கும். போலீஸ், ராணுவத்தில் பணிபுரிபவர்கள் உயர்ந்த நிலையை அடைவர். ஐ.டி. துறையினர்கள் சிறப்பான முன்னேற்றத்தை காணலாம். சகபெண் ஊழியர்கள் உதவிகரமாக இருப்பார்கள். மருத்துவர்கள் கூடுதல் பலன்களை காணலாம். அலுவலக ரீதியாக முன்னேற்றமான சம்பவம் நடக்கும். ஆசிரியர்களுக்கு உத்தியோகத்தில் இருந்த பின்தங்கிய நிலை மறையும். வேலையில் ஒரு தன்னம்பிக்கை பிறக்கும்.

வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். அரசின் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பகைவர்கள் சரண் அடையும் நிலை ஏற்படும். கணினி, அச்சுத்துறை, பத்திரிகை ஆகிய தொழில் சிறந்து விளங்கும். தங்கம், வெள்ளி, வைரம் நகைகள் வியாபாரம் செய்பவர்கள் அதிக லாபத்தை பெறுவர். புதிய வியாபாரம் ஓரளவு லாபத்தைத் தரும். கூட்டாளிகள் இடையே ஒற்றுமை ஏற்படும். அரசுவகையில் எதிர்பார்த்த அனுகூலம் கிடைக்கும். பகைவர்களின் சதியை முறியடிக்கும் வல்லமையை பெறுவீர்கள். கோவில் மற்றும் புண்ணிய காரியங்களுக்கான தொழில் சிறந்து விளங்கும்.

கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கப்பெற்று நல்ல வசதிகளையும் பெற்று வாழ்வீர்கள். பொதுநல சேவகர்கள் நல்ல அந்தஸ்தில் இருப்பர்.அரசியலில் எதிர்பார்த்த பதவி கிடைக்கப் பெறலாம்.மாணவர்கள் நல்ல மதிப்பெண் எடுக்கலாம். போட்டிகளில் வெற்றி பெறலாம். காலர்ஷிப் போன்றவை கிடைக்கும். விவசாயிகள்நெல், மஞ்சள்,உளுந்து, கொள்ளு, கிழங்கு வகைகள், நிலக்கடலை, மற்றும் கேழ்வரகு, காய்கறி வகைகள் போன்றவை மூலம் அதிக வருமானத்தை காணலாம். கால்நடை செல்வம் பெருகும். பால்பண்ணை மூலமும் நல்ல வருவாய் கிடைக்கும்.

பெண்கள் நீண்டநாட்களாக தடைபட்டு வந்த திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் கைகூடும்.நகை–ஆபரணங்கள் வாங்கலாம். பிரிந்திருந்த குடும்பம் ஒன்றுசேரும். உறவினர்கள் உங்களை நாடி வருவர்.புனித ஸ்தலங்களுக்கு சென்று வருவீர்கள். உடல்நலம் பித்தம், மயக்கம் போன்ற உபாதைகளால் அவதிப்–பட்டவர்கள் பூரண குணம் அடைவர். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றவர்கள் வீடு திரும்புவர்.

*பரிகாரம்: சனிக்கிழமை பெருமாளை வழிபடுங்கள். துர்க்கை அம்மனை வணங்கி வாருங்கள். ஆதரவற்ற மூதாட்டிக்கு இயன்ற உதவி செய்யுங்கள்.*



# கும்பம்

அவிட்டம்3,4ஆம் பாதம், சதயம்,
பூரட்டாதி1,2,3ஆம் பாதம்

*தோரணமலை விநாயகர் சன்னதிக்கு பின்னால் உள்ள வியாழனையும் மலையடிவாரத்தில் உள்ள முருகனையும் வணங்குங்கள்.*

அடுத்தவரின்மனதைஎளிதில் அறிந்து கொள்ளும் ஆற்றல் நிறைந்த கும்ப ராசி அன்பர்களே! நீங்கள் பிறரின்குறைகளை எளிதில் கண்டுபிடித்து விடுவீர்கள். குரு பகவான் இதுவரை 3–ம் இடமான மேஷ ராசியில் இருந்தார். அது அவ்வளவு சிறப்பான நிலை அல்ல. உங்கள் முயற்சியில் அவ்வப்போது தடைகள் ஏற்பட்டு இருக்கும். சிலர் வேலையை இழக்கும் நிலைகூட ஏற்பட்டு இருக்கலாம். இந்த நிலையில் குரு 4–ம் இடமான ரிஷப ராசிக்கு செல்கிறார். இந்த இடமும் அவ்வளவு சிறப்பானது என்று சொல்ல முடியாது. ஆனால் கடந்த கால பலன்களில் இருந்து இது மாறுபடும். பொதுவாக குருபகவான் 4–ல் இருக்கும் போது மனஉளச்சலையும், உறவினர் வகையில் வீண் பகையையும் உருவாக்குவார் என்பது ஜோதிட வாக்கு. ஆனால் அதைகண்டு கவலை கொள்ள வேண்டாம். குரு 15–10–2024 முதல் 10–2–2025 வரை வக்கிரம் அடைகிறார். அவர் வக்கிரத்தில் சிக்கும் போது கெடுபலனை தரமாட்டார் மாறாக நன்மையே தருவார். குருபகவான் வக்கிரம் அடைந்தாலும், அதாவது பின்னோக்கி நகர்ந்தாலும் ரிஷப ராசிக்குள்ளேயே இருக்கிறார்.

சனிபகவான் உங்கள் ராசியில் உள்ளார். இது சிறப்பான இடம் என்று சொல்ல முடியாது. ஆனால் பெரிய பாதகத்தை எந்த கிரகமும் தந்துவிடாது. பொதுவாக உங்கள் ராசியில் சனிபகவான் இருக்கும்போது உடல் உபாதைகளை தரலாம். சிற்சில பாதிப்புகளால் மருத்துச் செலவு வரலாம். ஆனால் அதை எளிதில் சமாளித்துவிடுவீர்கள். உறவினர்கள் வகையில் வீண் மனக்கசப்பு வரலாம். சிலருக்கு வீண் அலைச்சல் ஏற்படும். சிலர் தொழில் நிமித்தமாக வெளியூர் செல்லும் நிலை ஏற்படும். சனிபகவான் தான் இருக்கும் இடத்தில் இருந்து நன்மை தராவிட்டாலும் தன்3–ம் இடத்துப் பார்வையால் காரிய ஆனுகூலத்தையும், பொருளாதார வளத்தையும் தருவார். குடும்பத்தில் மகிழ்ச்சியையும், தொழில் விருத்தியையும் தருவார்.

நிழல் கிரகமான ராகு 2–ம் இடமான மீனத்தில் உள்ளார். இது சிறப்பான இடம் இல்லை.இங்கு அவர் குடும்பத்தில் சிற்சில பிரச்சினையையும் தூரதேச பயணத்தையும் ஏற்படுத்துவார். பொருட்களை களவு கொடுக்க நேரிடும். பொருளாதார இழப்பு ஏற்படும். கேது 8–ம் இடமான கன்னி ராசியில் இருக்கிறார். இது சிறப்பான இடம் இல்லை. இங்கு கேதுவால் விபத்து பயம், செயல்முடக்கம், உடல் நலக் குறைவு முதலியன வரலாம். உஷ்ண, பித்தம், மயக்கம், சளி போன்ற உபாதைகள் வரலாம்.

இந்த காலக்கட்டத்தில் முக்கிய கிரகங்கள் சாதகமற்ற இடத்தில் இருக்கிறார்கள் என்று கவலைகொள்ள தேவை இல்லை காரணம் ராகுவின் பின்னோக்கிய 4–ம் இடத்துப் பார்வையால் பொன்,பொருள் கிடைக்கும்.மகிழ்ச்சியும்,ஆனந்தமும்

இருக்கும்.பெண்கள் உங்களுக்கு உதவிகரமாக இருப்பர். மேலும் சனியின் 3–ம் இடத்துப் பார்வை சிறப்பாக அமைந்து உள்ளதால் அவர் காரிய அனுகூலத்தையும் பொருளாதார வளத்தையும் குடும்பத்தில் மகிழ்ச்சியையும் தந்து கொண்டு இருக்கிறார்.

குடும்பத்தில் ஒவ்வொருவரும் விட்டுக் கொடுத்து போகவும். பெரியோர்களின் ஆலோசனையை அவ்வப்போது கேட்பது நல்லது. மதிப்பு, மரியாதை சீராகவே இருக்கும். கணவன்–மனைவி இடையே பொறுமையும், விட்டுக் கொடுக்கும் தன்மையும் தேவை. உறவினர்கள் வகையில் சற்று ஒதுங்கி இருக்கவும்.உங்கள் முயற்சியில் தடைகள் வந்தாலும் சனிபகவானின் பார்வையாலும்,ராகுவின் பின்னோக்கிய 4–ம் இடத்துப் பார்வையாலும் பார்வைகளால் அதை எளிதில் முறியடிப்பீர்கள்.சகோதரிகள் உங்களுக்கு உதவிகரமாக இருப்பர். அவர்களால் பொருள் சேரும். பண வரவு இருக்கும். வாகன சுகம் ஏற்படும்.

உத்தியோகம் வேலைபளு இருக்கத்தான் செய்யும். மேல் அதிகாரிகளிடம் அனுசரித்து போகவும். சிலருக்கு திடீர் இடமாற்றம் ஏற்படலாம். பாதுகாப்பு தொடர்பான வேலையில் இருப்பவர்கள் உங்கள் பொறுப்புகளை தட்டிகழிக்காமல் செய்யவும். ஆசிரியர்களுக்கு அலைச்சல் ஏற்படும். .15–10–2024 முதல் 10–2–2025 வரை முக்கிய கோரிக்கைகளை வைக்கலாம். வேலையில் திருப்தி காண்பர். நீண்ட கால எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம். பதவி உயர்வு வந்து சேரும். சனிபகவானின் பார்வையால் மருத்துவர்கள் முன்னேற்றத்தை காணலாம். வக்கீல்கள் தாங்கள் நடத்தும் வழக்குகள் சிறப்பாக இருக்கும். சாதகமான தீர்ப்பு கிடைக்கும்.

வியாபாரத்தில் முன்னேற்றத்துக்கான வழிவகையை தேட வேண்டும். தரகு, அதிகாரம்–ஆதாரம் இல்லாத தொழில் சிறப்பாக நடக்கும். வெளியூர் பயணம் சாதக பலனை கொடுக்கும். 15–10–2024 முதல் 10–2–2025 வரை வியாபாரிகளுக்கு பகைவர்கள் வகையில் இருந்து வந்த இடையூறு, அனுகூலமற்ற போக்கு முதலியன மறையும்.சிறுதொழில் செய்பவர்கள் தொழிலை விரிவுபடுத்துவர். உங்கள் திறைமைக்கு ஏற்ற அங்கீகாரம் கிடைக்கும். பெண்களை பங்குதாரர்களாக கொண்ட வியாபாரம் தழைத்து ஓங்கும்.

கலைஞர்களுக்கு முயற்சி எடுக்க வேண்டியதிருக்கும். பொதுநல சேவகர்கள் , அரசியல்வாதிகள் பதவியை எதிர்பாராமல் பாடுபட வேண்டியதிருக்கும். மாணவர்கள் சற்று முயற்சி எடுத்தால் விரும்பிய பாடங்களை பெறுவர். விவசாயம். வருமானத்திற்கு குறை இருக்காது. பெண்கள் குடும்பத் தேவைக்காக அதிகமாக பாடுபடவேண்டிய திருக்கும். 15–10–2024 முதல் 10–2–2025 வரை பின்னடைவுகள் மறையும். தம்பதியினர் இடையே ஒற்றுமை மேம்படும். உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படலாம்.

*பரிகாரம்– சந்தர்ப்பம் கிடைக்கும் போது நவக்கிரகங்களை சுற்றி வாருங்கள். துர்க்கைக்கு எலுமிச்சை விளக்கு ஏற்றி வணங்கி வாருங்கள். வியாழக்கிழமை தோறும் தட்சிணாமூர்த்திக்கு அர்ச்சனை செய்ய வேண்டும். அப்போது கொண்டைக் கடலை தானம் செய்யலாம்.*



# மீனம்

பூரட்டாதி 4ஆம் பாதம்
உத்திராட்டாதி,ரேவதி முடிய

*தோரணமலை விநாயகரை வணங்கி பின்புறம் உள்ள வியாழபகவானை வழிபடுங்கள். பின்னர் நவக்கிரகத்தை சுற்றியும் வாருங்கள்.*

உங்கள் ராசியின் சின்னம் மீன். அது எவர் பிடியிலும் சிச்காமல் வழுக்கி ஓடும் தன்மை உடையது. அதைப் போல் நீங்களும் எந்த பிரச்சினையிலும் சிக்காமல் நழுவி விடுவீர்கள். குருபகவான் இது வரை உங்கள் ராசிக்கு2–ம் இடத்தில் இருந்து பல்வேறு நன்மைகளை தந்து கொண்டு இருந்தார். உங்களை எதிர்த்தவர்கள் உங்களை சரண் அடையும் நிலை ஏற்பட்டு இருக்கும். பகைவர்களின் சதி தவிடுபொடி ஆகி இருக்கும். மனதில் துணிச்சல் பிறந்து உங்கள் ஆற்றல் மேம்பட்டு இருக்கும். பொருளாதார வளம் சிறப்பாக இருந்து இருக்கும். வியாபாரம், வணிகம் நல்ல லாபத்தைக் கொடுத்து இருக்கும். உத்தியோகம் பார்ப்பவர்கள் மனநிம்மதி –யோடு பணியாற்றி இருப்பீர்கள். சிலர் புதிய பதவி பெற்று இருப்பர். திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் கைகூடிஇருக்கும். வீடு, மனை வாங்கி இருக்கலாம். இப்போது குருபகவான் 3–ம் இடமான ரிஷப ராசிக்கு செல்கிறார். இது சிறப்பான இடம் என்று சொல்ல முடியாது. பொதுவாக குரு 3–ம் இடத்தில் இருக்கும் போது முயற்சியில் தடை ஏற்படும். எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்காது. உங்கள் நிலையில் மாற்றம் ஏற்படும். அப்படியானால் குருவால் பிற்போக்கான பலன்கள்தான் நடக்குமோ என்று அஞ்ச வேண்டாம். காரணம் குரு சாதகமற்ற நிலையில் இருந்தாலும் குருவின் அனைத்து பார்வைகளும் சாதகமாக உள்ளன. எந்த இடையூறையும் அவரது பார்வை உடைத்து எறியும். மேலும் 15–10–2024 முதல் 10–2–2025 வரை வக்கிரம் அடைகிறார். அவர் வக்கிரத்தில் சிக்கும் போது கெடுபலனை தரமாட்டார் மாறாக நன்மையே தருவார். குருபகவான் வக்கிரம் அடைந்தாலும், அதாவது பின்னோக்கி நகர்ந்தாலும் ரிஷப ராசிக்குள்ளேயே இருக்கிறார்.

சனிபகவான் இப்போது உங்கள் ராசிக்கு 12–ம் இடமான கும்பத்தில் இருக்கிறார். இது சாதகமான இடம் என்று சொல்ல முடியாது. சனிபகவான் பொருளாதார இழப்பை தரலாம். எதிரிகளில் இடையூறுகள் அவ்வப்போது தலை தூக்கலாம். அலைச்சல் அதிகரிக்கும். சிலர் வேலை நிமித்தம் வெளியூர் செல்ல வேண்டியது வரலாம். சனிபகவானின் ஏழாம் இடத்துப் பார்வையால் முயற்சிகளில் வெற்றியை பெறலாம். அதாவது சிற்சில தடைகள் வந்தாலும் இறுதியில் அவர் தனது பார்வையால் தடைகளை உடைத்தெறிந்து வெற்றியைத் தருவார். மேலும் பகைவர்களின் சதியை முறியடிக்கும் வல்லமையை அந்தப்பார்வை தரும். உங்கள் ஆற்றலை மேம்படுத்துவார்.

ராகு உங்கள் ராசியில் இருக்கிறார். இது சிறப்பான இடம் இல்லை. இங்கு அவரால் வீண் அலைச்சல் ஏற்படலாம். உங்கள் முயற்சிக்கு பலன் இல்லாமல் போகலாம். கேது7–ம் இடத்தில் இருப்பதால் மனைவி வகையில் பிரச்சினையையும், அலைச்சலை

–யும் தரலாம்.வீண் மனவேதனை உருவாகலாம். எதிரிகளால் பிரச்சினை வரலாம்.

குருபகவானின் அனைத்து பார்வைகளால் பொருளாதார வளம் அதிகரிக்கும். தேவையான பொருட்களை வாங்கி குவிக்கலாம். எடுத்த காரியத்தை துரிதமாக முடிப்பீர்கள்.அதில் வெற்றியும் காண்பீர்கள். மதிப்பு, மரியாதை, கவுரவம் மேம்படும். ஆனாலும் வீண்விவாதங்களில் ஈடுபடவேண்டாம். முக்கிய பொறுப்புகளை குடும்பத்தில் உள்ள பெரியோர்கள் வசம் ஒப்படையுங்கள். அது சிறப்பாக முடியும்.

குடும்பத்தில் ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுத்து போகவும். உறவினர் வகையில் அவ்வளவு அனுகூலம் காணப்படவில்லை.செலவு அதிகரிக்கும். குருபார்வையால் துணிச்சல் பிறகும். பண வரவு கூடும். வீட்டில் மகிழ்ச்சியும், ஆனந்தமும் உருவாகும். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். சகோதரர்களால் பணஉதவி கிடைக்கும். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் நடக்கும். குழந்தை பாக்கியம் பெறுவர்.

உத்தியோகம் அதிகமாக உழைக்க வேண்டியது இருக்கும். வழக்கமான பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்றவற்றுக்கு தடையில்லை. குருபார்வையால் மேல் அதிகாரிகளின் அனுசரணை கிடைக்கும். சிலருக்கு இடமாற்றம் வரலாம். வேலை இன்றி இருப்பவர்கள் வேலை கிடைக்கப் பெறலாம். ஐ.டி. துறையினர்கள் உன்னத பலனை எதிர்பார்க்கலாம். ஏதோ காரணத்தால் வேலையை இழந்தவர்கள் மீண்டும் வேலை கிடைக்க பெறுவர். 15–10–2024 முதல் 10–2–2025 வரை முக்கிய கோரிக்கை –களை கேட்டு நிறைவேற்றிக் கொள்ளவும். எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், ஆசிரியர் பணியில் இருப்பவர் களுக்கு இந்த காலம் உன்னதமாக இருக்கும்.

வியாபாரம் வளர்முகமாக இருக்கும். உங்களிடம் வேலை பார்ப்பவர்கள் நன்றி கடனுடன் இருப்பர். வாடிக்கையாளர் மத்தியில் நற்பெயர் கிடைக்கும். தங்கம், வெள்ளி, வைர நகைகள் வியாபாரம் செய்பவர்கள் அதிக லாபத்தைப் பெறுவர். உங்கள் வளர்ச்சிக்கு ஒரு பெண் பின்னணியாக இருப்பார்.

கலைஞர்கள் புதிய ஒப்பந்தம் பெற தடைகளை சந்திக்க வேண்டியதிருக்கும். சமூகநல சேவகர்கள், அரசியல்வாதிகள் எதிர்பார்த்த பலனை பெற முடியாது. .மாணவர்களுக்கு குருபார்வையால் நல்ல மதிப்பெண் கிடைக்கும். மேல் படிப்பில் விரும்பிய பாடம் கிடைக்கும்.விவசாயிகள் அதிக முதலீடு போடும் விவசாய பயிரை தவிர்க்கவும். பாசிபயறு நெல், எள், உளுந்து, துவரை, மஞ்சள், தக்காளி, பழவகைகள் நல்ல வருவாயை கொடுக்கும். பெண்களுக்கு வீட்டினுள் இருந்த சிற்சில பிரச்சினை, உறவினர்கள் வகையில் ஏற்பட்ட மனக்கிலேசம் பொருள் இழப்பு முதலியன குருவின் பார்வையால் மறையும். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளை நடத்தி வைப்பார். உடல் நலம் சுமாராக இருக்கும். உஷ்ணம், தோல், தொடர்பான நோய் வரலாம்.

*பரிகாரம்: ராகுவுக்கும் அர்ச்சனை செய்யுங்கள். துர்க்கை வழிபாடு மிகவும் உயர்வை தரும். சனிக்கிழமை பெருமாள் கோவிலுக்கு சென்று ஊனமுற்றவர்களுக்கு இயன்ற உதவி செய்யுங்கள்.*

தவம் இருந்து பல்வேறு வரங்களை பெற்ற இரணியகசிபு பொதுமக்கள் மட்டுமின்றி தேவர்களையும் கொடுமை படுத்தினான். எல்லோரும் இறைவனின் நாமத்தை உச்சரிக்காமல் தனது நாமத்தையே சொல்ல வேண்டும் என்று கட்டளையிட்டான். அவன் இறைவனிடம் வரம் வாங்கும்போது தனக்கு மரணம் என்பதே வரக்கூடாது என்று கேட்டான். அதற்கு இறைவன் அது முடியாது என்று கூறவே தனக்கு மானிடராலும் மிருகத்தாலும் மரணம் நிகழக்கூடாது. இரவிலும் பகலிலும் மரணம்



# எதிரிகளை வெல்ல வைக்கும் நரசிம்ம வழிபாடு

நிகழக்கூடாது. வீட்டினுள்ளும் வெளியிலும் மரணம் தாக்க கூடாது என்றான். இறைவனும் அந்த வரத்தை அளித்தார். இப்படி பல நிபந்தனைகளால் தன்னை மரணம் அண்டாது என்று நினைத்தான்.


ஆனால் அவனது மகன் பிரகலாதன் தந்தைக்கு எதிராக மகாவிஷ்ணுவின் நாமத்தையே சொன்னான். மகன் என்றும் பாராது அவனை கொல்ல பல வழிகளில் முயற்சி செய்தான். ஆனால் அவைகளில் இருந்து சிறுவன் பிரகலாதன் தப்பித்தான்.

ஒருநாள் உன் கடவுள் எங்கே இருக்கிறார் என்று மகனிடம் கேட்க, அவன் இறைவன் தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார் என்றான். அப்படியானால் இந்த தூணில் இருக்கிறானா என்று கேட்டான். அதற்கு பிரகலாதன் ஆம் இந்த தூணிலும் இருக்கிறார் என்றான். உடனே இந்த தூணிலே உன் இறைவன் இருக்கிறானா பார்ப்போம் என்றபடி தூணை உடைத்தான். தூணில் இருந்து மனிதனும் அல்லாத மிருகமும் அல்லாத நரசிம்ம உருவத்தில் மகாவிஷ்ணு வந்தார். அவர் இரணியகசிபுவை தூக்கி வாசல்படிக்கு சென்றார். அவனை கொன்று குடலை எடுத்தார். அந்த பொழுது பகலும் அல்லாத இரவும் அல்லாத அந்திப்பொழுது.

மகாவிஷ்ணு நரசிம்ம அவதாரம்


எடுத்த நாள் சித்திரை மாதம் அமாவாசைக்குப் பிறகு வரும் வளர்பிறை சதுர்தசி அன்று. இந்த நாள் இந்த மாதம் 22-5-2024 அன்று புதன்கிழமை வருகிறது. அன்றைய தினம் விரதம் இருந்து மாலையில் நரசிம்மரை வழிபடுவது சிறப்பு. அல்லது பெருமாள் கோவிலுக்குச் சென்று வழிபடலாம். இந்த வழிபாட்டால் எதிரிகளிடம் இருந்து நாம் விடுபடலாம்.

பொதுவாக நரசிம்ம ஜெயந்தி சாந்திரமானப்படி கணக்கிடப்படுவதால் சித்திரை மாதம்தான் வரும். ஆனால்



ஸ்ரீரங்கம் கோவிலில் மட்டும் சவுரமானப்படி கணக்கிடுவதால் வைகாசி மாதம் வரும் வளர்பிறை சதுர்தசியில் கொண்டாடப்படும்.

# கங்கை பூமிக்கு வந்த நாள்



சித்திரை மாதம் அமாவாசைக்குப் பிறகு வரும் சப்தமி திதி கங்கா சப்தமி என்று பெயர். பகீரதனால் கங்கையை பூமிக்கு கொண்டு வந்த நாள் இது. தேவலோகத்தில் இருந்து பூமிக்கு கங்கை வந்தபோது அதன் வேகம் கட்டக்கடங்காமல் இருந்தது. இதனால் பூமி தாங்காது என்பதை உணர்ந்த ஜன்கு என்ற முனிவர் கங்கையை உள்வாங்கி தனது வலது காதின் வழியாக விட்டார் என்பது புராண வரலாறு. அன்றைய தினம் கங்கை தீர்த்தத்தை பூஜிப்பதால் நாம் அனைத்து பாவங்களில் இருந்தும் விடுபடுவோம். முனிவரின் காது வழியாக கங்கை வந்ததினால் ஆசமனம் செய்யும் போது தண்ணீர் இல்லை என்றால் வலது கையை வலது காதில் வைத்து கொண்டு செய்வார்கள் இதனால் கங்கை அங்கு இருப்பதாக ஐதீகம். இந்த ஆண்டு கங்கா சப்தமி நாள் மே மாதம் 14-ந் தேதி செவ்வாய்க்கிழமை வருகிறது.

# நாள் நல்ல நாள்

**1.5.2024 புதன்**

சித்திரை மாதம் 18-ந் தேதி இரவு 12.28 மணிவரை திருவோணம் நட்சத்திரம் பிறகு அவிட்டம் நட்சத்திரம். இரவு 1.09மணி வரை அஷ்டமி திதி பிறகு நவமி திதி.

இன்று ருது சாந்தி, பூ முடித்தல், விவாகம் நடத்த, குடி போக, பந்தல் அமைக்க, கும்பாபிஷேகம், வீடு, மனை ஆரம்பம் செய்ய, விதை விதைக்க உகந்த நாள்.

**சந்திராஷ்டமம்:** மிருகசீருஷம்.

**2.5.2024 வியாழன்**

சித்திரை மாதம் 19-ந் தேதி இரவு 11.03 மணிவரை அவிட்டம் நட்சத்திரம் பிறகு சதயம் நட்சத்திரம். இரவு 10.57 மணி வரை நவமி திதி பிறகு தசமி திதி.

இன்று பூ முடித்தல், பெயர் சூட்டல், கல்வி கற்க, இயல், இசை வித்தையை கற்க சிறந்த நாள்.

**சந்திராஷ்டமம்:** மிருகசீருஷம், திருவாதிரை.

**3.5.2024 வெள்ளி**

சித்திரை மாதம் 20-ந் தேதி இரவு 9.28 மணி வரை சதயம் நட்சத்திரம் பிறகு பூரட்டாதி நட்சத்திரம். இரவு 8.37 மணி வரை தசமி திதி பிறகு ஏகாதசி திதி .

இன்று ருது சாந்தி, பூ முடித்தல், சீமந்தம், பெயர் சூட்டல், முடி வாங்க, சாஸ்திரம், வில் வித்தை கற்க, வாகனம் வாங்க, விவசாயம், ஆலோசனை சபை கூட, வியாபார கணக்கு முடிக்க, பூமி வாங்க, தொட்டிலில் குழந்தையை விட, புனித யாத்திரை நடத்த சிறந்த நாள்.

**சந்திராஷ்டமம்:** திருவாதிரை , புனர்பூசம் .

**4.5.2024 சனி**

சித்திரை மாதம் 21-ந் தேதி இரவு 7.50 மணி வரை பூரட்டாதி நட்சத்திரம் பிறகு உத்திரட்டாதி நட்சத்திரம். இரவு 6.12 மணி வரை ஏகாதசி திதி பிறகு துவாதசி திதி .

இன்று அக்னி நட்சத்திரம் ஆரம்பம். பம்பு செட் அமைக்க, மந்திரம் ஜெபிக்க, விவகாரம்

முடிக்க சிறந்த நாள் ஆகும்.
**சந்திராஷ்டமம்:** புனர்பூசம், பூசம்.

**5.5.2024 ஞாயிறு**

சித்திரை மாதம் 22-ந் தேதி இரவு 6.14 மணிவரை உத்திரட்டாதி நட்சத்திரம் பிறகு ரேவதி நட்சத்திரம். பகல் 3.48 மணி வரை துவாதசி திதி பிறகு திரயோதசி திதி.

இன்று ருது சாந்தி, பூ முடித்தல், சீமந்தம், பெயர் சூட்டல், முடி வாங்க, வாஸ்து சாந்தி, கரும்பு நட, விவாகம் நடத்த, குரு குலத்தில் கல்வி பயில சிறந்தது.
**சந்திராஷ்டமம்:** பூசம், ஆயில்யம்.

**6.5.2024 திங்கள்**

சித்திரை மாதம் 23-ந் தேதி மாலை 4.43 மணிவரை ரேவதி நட்சத்திரம் பிறகு அசுவினி நட்சத்திரம். பகல் 1.30 மணி வரை திரயோதசி திதி பிறகு சதுர்த்தசி திதி.

இன்று ருது சாந்தி, பூ முடித்தல், சீமந்தம், பெயர் சூட்டல், முடி வாங்க, விதை விதைக்க, காது குத்த, அன்னம் ஊட்ட, உபநயனம், விவாகம், வேதம் கற்க, புத்தாடை அணிதல், வெளியூர் புறப்பட, கும்பாபிஷேகம் செய்ய, கடல் கடந்து செல்ல சிறந்த நாள் ஆகும்.
**சந்திராஷ்டமம்:** ஆயில்யம், மகம்.

**7.5.2024 செவ்வாய்**

சித்திரை மாதம் 24-ந் தேதி பகல் 3.23 மணிவரை அசுவினி நட்சத்திரம், பிறகு பரணி நட்சத்திரம். பகல் 11.21 மணி வரை சதுர்த்தசி திதி பிறகு அமாவாசை திதி.

இன்று பூமுடித்தல், வாகனம்

**அக்னி நட்சத்திர நாளில் என்ன செய்யலாம்**



அக்னி நட்சத்திரத்தில் என்னென்ன செய்யலாம் தெரியுமா? திருமணம், நிச்சயதார்த்தம், சீமந்தம், பெண் பார்த்தல், கட்டிய வீட்டில் குடிபுகுதல், வாடகை வீடு மாறுதல், உபநயனம் ஆகியவை செய்வதில் எந்த தவறும் இல்லை. சுப விசேஷங்களுக்கு பேச்சுவார்த்தை நடத்தலாம்.

வாங்க, புதிய ஆடை, ஆபரணம் வாங்குதல், அரசு பதவி ஏற்க, ஏர் கட்ட, விதை விதைக்க, தென்னை, மா, பலா முதலிய மரங்கள் வைக்க சிறந்தது. பகல் 3.23 மணிக்கு பிறகு தீர்த்த யாத்திரையில் திதி முதலானவை நடத்த, முட் செடிகள் நட, கத்தரி விதை விதைக்க சிறந்த நாள்.

**சந்திராஷ்டமம்:** மகம் ,பூரம் .

**8.5.2024 புதன்**

சித்திரை மாதம் 25-ந் தேதி பகல் 2.17 மணிவரை பரணி நட்சத்திரம் பிறகு கார்த்திகை நட்சத்திரம். காலை 9.25 மணி வரை அமாவாசை திதி பிறகு பிரதமை திதி

இன்றுதீர்த்த யாத்திரையில் திதி முதலானவை நடத்த, முட் செடிகள் நட, கத்தரி விதை விதைக்கலாம். பகல்2.17 மணிக்கு பிறகு செடிகள் வெட்ட, கடன் நீக்க, வாகனம் விற்க, குழந்தைகளுக்கு முடியெடுக்க சிறந்த நாள் ஆகும்.

**சந்திராஷ்டமம்:** பூரம் , உத்திரம்

**9.5.2024 வியாழன்**

சித்திரை மாதம்26-ந்தேதி பகல் 1.32 மணிவரை கார்த்திகை நட்சத்திரம், பிறகு ரோகிணி நட்சத்திரம்.காலை 7.49 மணி வரை பிரதமை திதி பிறகு துவிதியை திதி

இன்று செடிகள் வெட்ட, கடன் நீக்க, வாகனம் விற்க, குழந்தைகளுக்கு முடியெடுக்க சிறந்த நாள். பகல் 1.32 மணிக்கு பிறகு ருது சாந்தி, பூ முடித்தல், சீமந்தம், பெயர் சூட்டல், உபநயனம், கல்வி கற்றல், கும்பாபிஷேகம், நவக்கிரக சாந்தி, வியாபாரம், தானியங்கள்

## செவ்வாய்கிழமையும் முருகன் வழிபாடும்



*செவ்வாய் என்னும் அங்காரகன் அருளைப்பெற விரும்புபவர்கள், ஜாதகத்தில் செவ்வாய் பலம் குறைந்தவர்கள் செவ்வாய்க்கிழமை அன்று விரதம் இருந்து முருகனை வழிபட்டு துவரை தானம் செய்வது நல்லது.*

இருப்பு வைக்க, கிணறு வெட்ட, வாசற்கால் நாட்ட, பத்திரிக்கை வெளியிட, விருந்துண்ண சிறந்தது

***சந்திராஷ்டமம்:*** *உத்திரம் , அஸ்தம்.*

***10.5.2024 வெள்ளி***

*சித்திரை மாதம் 27-ந் தேதி பகல் 1.09. மணிவரை ரோகிணி பிறகு மிருகசீருஷம் நட்சத்திரம். காலை 6.34 மணிவரை துவிதியை திதி பிறகு இரவு 5.11 மணி வரை (சனி அதிகாலை) திருதியை திதி அதன்பிறகு சதுர்த்தி திதி*

*இன்று விவாகம், ருது சாந்தி, பூ முடித்தல், சீமந்தம், பெயர் சூட்டல், முடிவாங்க, காது குத்த, அன்னம் ஊட்டுதல், உபநயனம், கல்வி ஆரம்பித்தல், ஆபரணம் அணிதல், கிரகப்பிரவேசம் நடத்த சிறந்த நாள்.*

***சந்திராஷ்டமம்:*** *அஸ்தம் , சித்திரை .*

***11.5.2024 சனி***

*சித்திரை மாதம் 28-ந் தேதி பகல் 1.14 மணி வரை மிருகசீருஷம் நட்சத்திரம், பிறகு திருவாதிரை நட்சத்திரம். இரவு 5.27 மணி வரை (ஞாயிறு அதிகாலை) சதுர்த்தி திதி பிறகு பஞ்சமி திதி.*

*இன்று ருதுசாந்தி, பூ முடித்தல், முடிவாங்க, ன்னம் ஊட்டுதல், உபநயனம், கல்வி ஆரம்பித்தல், ஆபரணம் அணிய சிறந்தது. பகல் 1.14 மணிக்கு பிறகு சூளைக்கு நெருப்பிட, சிவபூஜை செய்ய, ஆயுதம், கலை கற்க உகந்த நாள்.*

***சந்திராஷ்டமம்:*** *சித்திரை , சுவாதி .*

## ராகு–கேதுவுக்கு உரிய வழிபாடு



*ராகுவின் அருளைப்பெற விரும்புபவர்கள். செவ்வாய்க்கிழமை தோறும் வடக்கு நோக்கிய அம்பிகையை வழிபட்டு வருவது நல்லது. பத்திரகாளி அம்மன் ராகுவின் தெய்வம். எனவே அந்த அம்மனை வணங்கலாம்.*

*கேதுவின் அருளைப்பெற விரும்புபவர்கள் விநாயகப் பெருமானை முறையாக வழிபட்டு வருவது நல்லது. ராகுவிற்குரிய உளுந்து, கேதுவிற்குரிய கொள்ளு தானம் செய்வது சிறந்தது.*

## பெண்களுக்கு அழகை தரும் வழிபாடு



*சித்திரை மாதம் அமாவாசைக்குப்பிறகு வரும் வளர்பிறை பஞ்சமி திதி நாளில் லாவண்ய கவுரி விரதம் இருக்க சிறந்த நாள். இந்த ஆண்டு மே 12ந் தேதி ஞாயிற்றுக்கிழமை வரும் பஞ்சமி நாளில் இந்த விரதத்தை மேற்கொண்டால் பெண்கள் அழகு பெறுவார்கள். இந்த விரதம் இருக்க முடியாத பெண்கள் அருகில் உள்ள சிவன் கோவிலுக்குச் சென்று அம்பாளை வழிபடலாம்.*

***12.5.2024 ஞாயிறு***

சித்திரை மாதம் 29-ந் தேதி பகல்1.46 மணிவரைதிருவாதிரை நட்சத்திரம், பிறகு புனர்பூசம் நட்சத்திரம். இரவு 5.38 மணி வரை (திங்கள் அதிகாலை) பஞ்சமி திதி பிறகு சஷ்டி திதி.

இன்று சூளைக்கு நெருப்பிட, சிவபூஜை செய்ய, ஆயுதம், கலை கற்றல். பகல்1.46 மணிக்கு பிறகு பூ முடித்தல், சீமந்தம், பெயர் சூட்டடல், முடி வாங்க, விருந்து சாப்பிட, காது குத்த, உபநயனம், கல்வி கற்றல், வாஸ்து சாந்தி, கிரகப் பிரவேசம், புது துணி வாங்க, திருமணம், கும்பாபிஷேகம் நடத்த சிறந்தது

**சந்திராஷ்டமம்:** சுவாதி , விசாகம் .

***13.5.2024 திங்கள்***

சித்திரை மாதம் 30-ந் தேதி பகல் 2.50 மணிவரை புனர்பூசம் நட்சத்திரம், பிறகு பூசம் நட்சத்திரம். நாள் முழுவதும் சஷ்டி திதி.

இன்று பூ முடித்தல், சீமந்தம், பெயர் சூட்டடல், முடி வாங்க, விருந்து சாப்பிட, காது குத்த, உபநயனம், கல்வி கற்றல், வாஸ்து சாந்தி, கிரகப் பிரவேசம், புது துணி வாங்க, திருமணம், கும்பாபிஷேகம் நடத்த சிறந்த நாள். பகல் 2.50 மணிக்கு பிறகு ருதுசாந்தி, பசு வாங்க, விவசாயம், ஆலோசனை சபை கூட, பதவிப் பிரமாணம் ஏற்க, கரும்பு நட, குடி போக, ரத்தின நகைகள் அணிய சிறந்த நாள்.

**சந்திராஷ்டமம்:** விசாகம் , அனுஷம் .

***14.5.2024 செவ்வாய்***

வைகாசி மாதம்1-ந்தேதி மாலை

*4.22 மணிவரை பூசம் நட்சத்திரம் பிறகு ஆயில்யம் நட்சத்திரம். காலை 6.26 மணி வரை சஷ்டி திதி பிறகு சப்தமி திதி.*

*இன்று ருது சாந்தி, பூ முடித்தல், சீமந்தம், பெயர் சூட்டல், முடி வாங்க, சாஸ்திரம், கலை கற்க, பசுவாங்க, விவசாயம், ஆலோசனை சபை கூட, பதவிப் பிரமாணம் ஏற்க, வாஸ்து சாந்தி,*

## அக்னி நட்சத்திரத்தில் தவிர்க்க வேண்டியவை



*அக்னி நட்சத்திர காலத்தில் தவிர்க்க வேண்டியவை வருமாறு: வீடு கட்ட ஆரம்பிப்பது மற்றும் அதற்கான கிணறு வெட்டுதல், பூமி பூஜை செய்வது, விவசாய விதைப்பு வேலைகள், மரம் வெட்டுதல், குழந்தைகளுக்கு காது குத்தி மொட்டையடித்தல், கிரகப்பிரவேசம், பந்தல்கால் நடுவது, தெய்வத் திருவுருவங்களைப் பிரதிஷ்டை செய்வது போன்றவைகளைத் தவிர்ப்பது நல்லது.*

*கரும்பு நட, ரத்தின நகைகள் அணிய உகந்த நாள்.*

***சந்திராஷ்டமம்:** அனுஷம் , கேட்டை .*

### *15.5.2024 புதன்*

*வைகாசி மாதம் 2-ந் தேதி இரவு 6.20மணி வரை ஆயில்யம் நட்சத்திரம் பிறகு மகம் நட்சத்திரம். காலை 7.36 மணி வரைசப்தமி பிறகு அஷ்டமி திதி*

*இன்று ஜெபம் பூர்த்தி செய்ய, கிரகப்பார்வை, நவக்கிரக சாந்தி செய்ய, ஆயுதம் வாங்க சிறந்த்து.*

***சந்திராஷ்டமம்:** கேட்டை , மூலம் .*

### *16.5.2024 வியாழன்*

*வைகாசி மாதம் 3-ந் தேதி இரவு 8.38 மணிவரை மகம் நட்சத்திரம் பிறகு பூரம் நட்சத்திரம். காலை 9.11 மணி வரை அஷ்டமி பிறகு நவமி திதி.*

*இன்று விவாகம், மந்திரம் கற்க, சந்நியாசி, தவசிகளை தரிசனம் செய்ய உகந்த நாள்.*

***சந்திராஷ்டமம்:** மூலம் , பூராடம் .*

### *17.5.2024 வெள்ளி*

*வைகாசி மாதம் 4-ந் தேதி இரவு 11.09 மணிவரை பூரம் நட்சத்திரம் பிறகு உத்திரம் நட்சத்திரம் . பகல் 11.01 மணி*

வரை நவமி திதி பிறகு தசமி திதி

இன்று ஆயுத பிரயோகம் செய்ய, கிரகப்பார்வை நிவர்த்தி செய்ய, அம்பாள் தரிசனம் செய்ய சிறந்த நாள்.

**சந்திராஷ்டமம்:** பூராடம் , உத்திராடம்.

***18.5.2024 சனி***

வைகாசி மாதம் 5-ந் தேதி இரவு 1.44 மணி வரை உத்திரம் நட்சத்திரம் பிறகு அஸ்தம் நட்சத்திரம். பகல் 1.00 மணி வரை தசமி திதி பிறகு ஏகாதசி திதி.

இன்று கர்ப்பதானம், அன்னம் ஊட்டுதல், உபநயனம், வித்தை கற்க, ஆபரணம் அணிய, விதை விதைக்க சிறந்த நாள்.

**சந்திராஷ்டமம்:** உத்திராடம் , திருவோணம்.

***19.5.2024 ஞாயிறு***

வைகாசி மாதம் 6-ந் தேதி இரவு 4.14 மணிவரை (திங்கள் அதி காலை )அஸ்தம் நட்சத்திரம் பிறகு சித்திரை நட்சத்திரம். பகல் 2.58 மணி வரை ஏகாதசி திதி பிறகு துவாதசி திதி.

இன்று ருது சாந்தி, பூ முடித்தல், சீமந்தம், பெயர் சூட்டல், முடி வாங்க, விருந்து சாப்பிட, பதவிப் பிரமாணம் ஏற்க, வாஸ்து சாந்தி, கரும்பு நட, விவாகம் நடத்த, குடி

## சனிபகவானுக்கு எள் தானம்



*சனி பகவானின் அருளைப்பெற விரும்புவர்கள், சனிக்கிழமை அன்று விரதமிருந்து எள்தீபம் ஏற்றி வழிபட்டு வருவது நல்லது. திசை மாறிய தெய்வ வழிபாடு மிகவும் நற்பலனை வழங்கும். எள் சாதம் நைவேத்தியம் செய்யலாம். எள் தானம் செய்தும் பயன்பெறலாம்லாம்.*

போக, நந்தவனம் வைக்க, அரசு அதிகாரி பார்க்க சிறந்த நாள்.


**சந்திராஷ்டமம்:** அவிட்டம் .

***20.5.2024 திங்கள்***

வைகாசி மாதம் 7-ந் தேதி நாள் முழுவதும் சித்திரை நட்சத்திரம். மாலை 4.44 மணி வரை துவாதசி திதி பிறகு திரயோதசி திதி.

## சூரியன் அருள் கிடைக்க வேண்டுமா?





*சூரியன் அருள்பெற விரும்புபவர்கள், ஞாயிற்றுக்கிழமை அன்று 'ஆதிவார விரதம்' இருப்பது நல்லது. சூரியன் உதிக்கும் முன்பாக எழுந்து சூரிய வழிபாட்டோடு சிவனையும் வழிபடுங்கள். கோதுமை தானம் செய்வது,*

*இன்று கரிநாள். முக்கிய சுபநிகழ்ச்சிகளைத் தவிர்க்கவும்.*

***சந்திராஷ்டமம்:*** *சதயம் .*

***21.5.2024 செவ்வாய்***

*வைகாசி மாதம் 8-ந் தேதி காலை 6.27 மணி வரை சித்திரை நட்சத்திரம் பிறகு சுவாதி நட்சத்திரம். இரவு 6.12 மணி வரை திரயோதசி திதி பிறகு சதுர்த்தசி திதி.*

*இன்று கர்ப்பதானம், பூ முடித்தல், பெயர் சூட்டடல், முடி வாங்க, அன்னம் ஊட்ட, ஜோதிடம் கற்க, புத்தகம், பத்திரிக்கை வெளியிட, நவக்கிரக ஜெபம், விவகார துவக்கம், கர்ம வியாதிகளுக்கு மருந்து சாப்பிட உகந்த நாள்.*

***சந்திராஷ்டமம்:*** *பூரட்டாதி .*

***22.5.2024 புதன்***

*வைகாசி மாதம் 9-ந் தேதி காலை 8.20 மணிவரை சுவாதி நட்சத்திரம் பிறகு விசாகம் நட்சத்திரம். இரவு 7.16 மணி வரை சதுர்த்தசி திதி பிறகு பௌர்ணமி திதி.*

*இன்று விவசாய தானியங்களை அறுக்க,கிணறுசீர்செய்ய சிறந்தது*

***சந்திராஷ்டமம்:*** *உத்திரட்டாதி*

***23.5.2024 வியாழன்***

*வைகாசி மாதம் 10-ந் தேதி காலை 9.47 மணிவரை விசாகம் நட்சத்திரம் பிறகு அனுஷம் நட்சத்திரம். இரவு 7.51 மணி வரை பௌர்ணமி திதி பிறகு பிரதமை திதி*

*இன்று ருது சாந்தி, பூ முடித்தல், சீமந்தம், பெயர் சூட்டடல், முடி வாங்க, அன்னம் ஊட்ட, விவசாயம், பதவிப் பிரமாணம் ஏற்க, வாஸ்து சாந்தி, துாண் நாட்ட உகந்த நாள்.*

***சந்திராஷ்டமம்:*** *ரேவதி .*

***24.5.2024 வெள்ளி***

*வைகாசி மாதம் 11-ந் தேதி*

காலை10.44மணிவரை அனுஷம் நட்சத்திரம் பிறகு கேட்டை நட்சத்திரம். இரவு 7.54 மணி வரை பிரதமை திதி பிறகு துவிதியை திதி .

இன்று நகைகளை அழிக்க, ஆயுத வேலைகள் ஆரம்பிக்க, மந்திரம் செய்ய, ஆட்களை நீக்க, கடன் நீக்க, ரத்தினங்களை நன்கு அலச, வாஸ்து சாந்தி செய்ய சிறந்த நாள்.

**சந்திராஷ்டமம்:** ரேவதி , அசுவினி.

**25.5.2024 சனி**

வைகாசி மாதம் 12-ந் தேதி பகல் 11.11 மணிவரை கேட்டை நட்சத்திரம் பிறகு மூலம் நட்சத்திரம். இரவு 7.28 மணி வரை துவிதியை திதி பிறகு திருதியை திதி .

இன்று நகைகளை அழிக்க, ஆயுத வேலைகள் ஆரம்பிக்க, மந்திரம் செய்ய, ஆட்களை நீக்க, கடன் நீக்க, ரத்தினங்களை நன்கு அலச, வாஸ்து சாந்தி செய்யலாம். பகல் 11.11 மணிக்கு பிறகு ருதுசாந்தி, பூமுடித்தல், விவகாரம், பெயர் சூட்டல், உபநயனம், காது குத்த சிறந்த நாள்.

**சந்திராஷ்டமம்:** அசுவினி , பரணி .

**26.5.2024 ஞாயிறு**

வைகாசி மாதம் 13-ந் தேதி பகல் 11.09 மணி வரை மூலம் நட்சத்திரம் பிறகு பூராடம் நட்சத்திரம். இரவு 6.32 மணி

## மச்ச அவதாரம் எடுத்த நாள்



*பங்குனி மாதம் அமாவசைக்கு அடுத்து பவுர்ணமிக்கு பிறகு வரும் திரயோதசி(தேய்பிறை) நாளில்தான் மகாவிஷ்ணு மச்ச அவதாரம் எடுத்தார். ஆனால் அன்றைய தினம் திரயோதசி திதி மாலை 24 நாழிகைக்கு மேல் 30 நாளிகைக்குள் திரயோதசி திதி இருக்க வேண்டும். அப்படி பார்த்தால் இந்த ஆண்டு சித்திரை மாதம் 22ந் தேதி அதாவது மே மாதம் 5–ந் தேதி ஞாயிற்றுக் கிழமைதான் மச்ச அவதாரம் எடுத்த நாள். மச்ச ஜெயந்தியான அன்று பெருமாள் கோவிலுக்குச் சென்று வணங்கி வருவது நல்லது.*

வரை திருதியை திதி பிறகு சதுர்த்தி திதி.

இன்று ருது சாந்தி, பூ முடித்தல், சீமந்தம், விருந்துண்ண, வில்வித்தை கற்க, ஆபரணம் அணிய, விவகாரம், பெயர் சூட்டல், உபநயனம், காது குத்த சிறந்த நாள் ஆகும். பகல் 11.09 மணிக்கு பிறகு கணக்கு பயில, கரும்பு நட, பழைய கிணறு சீர் செய்ய, புனித ஸ்நானம் செய்ய, புனித திதி செய்ய, பிரயாணம் செல்ல உகந்த நாள்.

## சூரியனை வழிபட உதந்த நாள்





*இந்த மாதம் (மே) 14–ந் தேதி சப்தமி திதி. இதனை கர்க்கரா சப்தமி என்று அழைப்பர். இந்த நாளில் சூரியனை நோக்கி விரதம் இருப்பது நல்லது. நவக்கிரகங்களில் சூரியனுக்கு சிவப்பு ஆடை சாத்தி வணங்கலாம். இதனால் சூரியன் தொடர்பான தோஷங்கள் விலகும்.*

**சந்திராஷ்டமம்:** பரணி , கார்த்திகை .

**27.5.2024 திங்கள்**

வைகாசி மாதம் 14-ந் தேதி காலை 10.42 மணி வரை பூராடம் நட்சத்திரம் பிறகு உத்திராடம் நட்சத்திரம். மாலை 5.12 மணி வரை பஞ்சமி திதி பிறகு அஷ்டமி திதி.

இன்று கர்ப்பதானம், பூ முடித்தல், சீமந்தம், பெயர் சூட்டல், காது குத்த, தேவா பிரதிஷ்டை, விவாகம், கிரகப்பிர வேஷசம் நடத்த சிறந்த நாள்.

**சந்திராஷ்டமம்:** கார்த்திகை , ரோகிணி .

**28.5.2024 செவ்வாய்**

வைகாசி மாதம் 15-ந் தேதி காலை 9.51 மணிவரை உத்திராடம் நட்சத்திரம் பிறகு திருவோணம் நட்சத்திரம். பகல் 3.30மணி வரை பஞ்சமி திதி பிறகு சஷ்டி திதி .

இன்று ருதுசாந்தி, பூ முடித்தல், குடி போக, பந்தல் அமைக்க, கும்பாபிஷேகம், வீடு, மனை ஆரம்பம்செய்ய, விதை விதைக்க உகந்த நாள்.

இன்று அக்னி நட்சத்திரம் முடிகிறது.

**சந்திராஷ்டமம்:** ரோகிணி .

***29.5.2024 புதன்***

*வைகாசி மாதம் 16-ந் தேதி காலை 8.42 மணிவரை திருவோணம் நட்சத்திரம் பிறகு அவிட்டம் நட்சத்திரம். பகல் 1.30 மணி வரை சஷ்டி திதி பிறகு சப்தமி திதி.*

*இன்று கரிநாள். முக்கிய சுபநிகழ்ச்சிகளைத் தவிர்க்கவும்.*

***சந்திராஷ்டமம்:** மிருகசீருஷம்*

***30.5.2024 வியாழன்***

*வைகாசி மாதம் 17-ந் தேதி காலை 7.19 மணிவரை அவிட்டம் நட்சத்திரம் பிறகு இரவு 4.27 மணி வரை (வெள்ளி அதிகாலை) சதயம் நட்சத்திரம் அதன்பிறகு பூரட்டாதி நட்சத்திரம். பகல் 11.18 மணி வரை சப்தமி பிறகு அஷ்டமி திதி*

*இன்று ருதுசாந்தி, பூ முடித்தல், சீமந்தம், முடி வாங்க, சாஸ்திரம், வில் வித்தை கற்க, வாகனம் வாங்க, விவசாயம், ஆலோசனை சபை கூட, வியாபார கணக்கு முடிக்க, பூமி வாங்க, புனித யாத்திரை நடத்த உகந்த நாள்.*

***சந்திராஷ்டமம்:** திருவாதிரை .*

***31.5.2024 வெள்ளி***

*வைகாசி மாதம் 18-ந் தேதி இரவு 4.09 மணி வரை (சனி அதிகாலை) பூரட்டாதி நட்சத்திரம் பிறகு உத்திரட்டாதி நட்சத்திரம். காலை 8.58 மணி வரை அஷ்டமி பிறகு நவமி திதி.*

## கிரேதா யுகம் தோன்றி நாள்

நான்கு யுகங்களில் முதல் யுகமான கிரேதாயுகம் சித்திரை மாதம் அமாவாசைக்கு பிறகு வரும் திரிதியை திதி நாளில்தான். அந்த நாள் மே 10–ந் தேதி வருகிறது. அன்றைய தினம் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்தால் அவர்களின் பரிபூரண ஆசி கிடைக்கும். மேலும் அன்றைய நாள் அட்சய திருதியை. எனவே அன்று புண்ணி தீர்த்தங்களில் நீராடி இறைவனை வழிபட வேண்டும். மேலும் ஏழைகளுக்கு தங்களால் ஆன உதவி செய்யலாம்.



## பராசக்தியின் அம்சமாக வாசவி

*அன்னை பராசக்தியின் அம்சமாக தோன்றியவள்தான் வாசவி. ஆரிய வைசிய சமூகத்திற்கு குலதெய்வம் இந்த வாசவிதான். இந்த தெய்வம் அவதரித்த நாள் இந்த ஆண்டு மே 18–ந் தேதி சனிக்கிழமை வருகிறது. வாசவியை கன்னிகா பரமேசுவரி என்றும் அழைப்பார்கள். அன்றைய தினம் கன்னிகாபரமேசுவரி கோவிலுக்கு சென்று வழிபடுவது சிறப்பு.*



இன்று பம்பு செட் அமைக்க, மந்திரம் ஜெபிக்க, விவகாரம் முடிக்க உகந்த நாள்.

**சந்திராஷ்டமம்:** புனர்பூசம் .

**1.6.2024 சனி**

வைகாசி மாதம் 19-ந் தேதி இரவு 2.32 மணிவரை உத்திரட்டாதி நட்சத்திரம் பிறகு ரேவதி நட்சத்திரம். காலை 6.33 மணிவரை நவமி திதி, பிறகு இரவு 3.35 மணி வரை தசமி திதி அதன்பிறகு ஏகாதசி திதி.

இன்று ருது சாந்தி, பூ முடித்தல், சீமந்தம், முடி வாங்க, வாஸ்து சாந்தி, கரும்பு நட, குருகுலத்தில் கல்வி பயில உகந்த நாள்.

**சந்திராஷ்டமம்:** பூசம் .

**2.6.2024 ஞாயிறு**

வைகாசி மாதம் 20-ந் தேதி இரவு 12.59 மணிவரை ரேவதி நட்சத்திரம் பிறகு அசுவினி நட்சத்திரம் இரவு 1.47 மணி வரை ஏகாதசி திதி, பிறகு துவாதசி திதி.

இன்று ருது சாந்தி, பூ முடித்தல், சீமந்தம், பெயர் சூட்டல், முடி வாங்க, விதை விதைக்க, காது குத்த, அன்னம் ஊட்ட, உபநயனம், விவாகம், வேதம் கற்க, புத்தாடை அணிதல், வெளியூர் புறப்பட, கும்பாபிஷேகம் நடத்த, கடல் கடந்து செல்ல சிறந்த நாள் ஆகும்.

**சந்திராஷ்டமம்:** ஆயில்யம் , மகம் .

**3.6.2024 திங்கள்**

வைகாசி மாதம் 21-ந் தேதி இரவு 11.36 மணி வரை அசுவினி நட்சத்திரம் பிறகு பரணி நட்சத்திரம் இரவு 11.37 மணி வரை துவாதசி, பிறகு திரயோதசி திதி.

இன்று பூமுடித்தல், கர்ப்பதானம், விவாகம்,

அன்னப்பிரசானம், பெயர் சூட்ட, உபநயனம், வாகனம் வாங்க,புதிய ஆடை, ஆபரணம் வாங்குதல், அரசு பதவி ஏற்க, பொன் ஏர் கட்ட, விதை விதைக்க, தென்னை, மா, பலா முதலிய மரங்கள் வைக்க, கிரகப்பிரவேசம், பசுந்-தொழுவம் கட்ட உகந்த நாள்.

**சந்திராஷ்டமம்:** மகம் ,பூரம் .

**4.6.2024 செவ்வாய்**

வைகாசி மாதம் 22-ந் தேதி இரவு 10.27 மணிவரை பரணி நட்சத்திரம் பிறகு கார்த்திகை நட்சத்திரம் இரவு 9.40 மணி வரை திரயோதசி பிறகு சதுர்த்தசி திதி.

இன்று தீர்த்த யாத்திரையில் திதி முதலானவை நடத்த, முட்செடிகள் நட, கத்தரி விதை விதைக்க சிறந்த நாள் ஆகும்.

**சந்திராஷ்டமம்:** பூரம் ,உத்திரம்

**5.6.2024 புதன்**

வைகாசி மாதம் 23-ந் தேதி இரவு 9.36 மணிவரை கார்த்திகை நட்சத்திரம் பிறகு ரோகிணி நட்சத்திரம்.இரவு 8.02மணி வரை சதுர்த்தசிபிறகு அமாவாசை திதி.

இன்று செடிகள் வெட்ட, கடன் நீக்க, வாகனம் விற்க, குழந்தைகளுக்கு முடியெடுக்க சிறந்த நாள்.

**சந்திராஷ்டமம்:** உத்திரம் , அஸ்தம் .

**6.6.2024 வியாழன்**

வைகாசி மாதம் 24-ந் தேதி இரவு 9.08 மணிவரை ரோகிணி நட்சத்திரம் பிறகு மிருகசீருஷம் நட்சத்திரம். இரவு 6.47 மணி வரை அமாவாசை திதி பிறகு பிரதமை திதி .

இன்று ருது சாந்தி, பூ முடித்தல், சீமந்தம், பெயர் சூட்டல், உபநயனம், கல்வி கற்றல், கிரகப்பிரவேசம், கும்பாபிஷேகம், நவக்கிரக சாந்தி, வியாபாரம், தானியங்கள் இருப்புவைக்க,கிணறு வெட்ட, வாசற்கால் நாட்ட, பத்திரிக்கை வெளியிட, விருந்துண்ண சிறந்த நாள் ஆகும்.

**சந்திராஷ்டமம்:** அஸ்தம் , சித்திரை .

**7.6.2024 வெள்ளி**

வைகாசி மாதம் 25-ந் தேதி இரவு 9.05 மணிவரை மிருகசீருஷம் நட்சத்திரம் பிறகு திருவாதிரை நட்சத்திரம். மாலை5.57மணி வரை பிரதமை திதி பிறகு துவிதியை திதி .

இன்று விவாகம், ருது சாந்தி, பூ முடித்தல், சீமந்தம், பெயர் சூட்டல், முடிவாங்க, காது குத்த, அன்னம் ஊட்டுதல், உபநயனம், கல்வி ஆரம்பித்தல், ஆபரணம்

அணிதல், கிரகப்பிர வேசம் நடத்த சிறந்த நாள்.

***சந்திராஷ்டமம்:*** சித்திரை, சுவாதி.

***8.6.2024 சனி***

வைகாசி மாதம் 26-ந் தேதி இரவு 9.32 மணிவரை திருவாதிரை நட்சத்திரம் பிறகு புனர்பூசம் நட்சத்திரம். மாலை 5.36 மணி வரை துவிதியை திதி பிறகு திருதியை திதி.

இன்று சூளைக்கு நெருப்பிட, சிவபூஜை செய்ய, ஆயுதம், கலை கற்க சிறந்த நாள்.

***சந்திராஷ்டமம்:*** சுவாதி, விசாகம்.

***9.6.2024 ஞாயிறு***

வைகாசி மாதம் 27-ந் தேதி இரவு 10.28 மணிவரை புனர்பூசம் நட்சத்திரம் பிறகு பூசம் நட்சத்திரம். மாலை 5.45 மணி வரை திருதியை திதி பிறகு சதுர்த்தி திதி.

இன்று பூ முடித்தல், சீமந்தம், பெயர் சூட்டடல், முடி வாங்க, விருந்து சாப்பிட, காது குத்த, உபநயனம், கல்வி கற்றல், வாஸ்து சாந்தி, கிரகப் பிரவேசம், புது துணி வாங்க, திருமணம், கும்பாபிஷேகம் நடத்த சிறந்தது.

***சந்திராஷ்டமம்:*** விசாகம், அனுஷம்.

***10.6.2024 திங்கள்***

வைகாசி மாதம் 28-ந் தேதி இரவு 11.53 மணிவரை பூசம் நட்சத்திரம் பிறகு ஆயில்யம் நட்சத்திரம். இரவு 6.25 மணி வரைசதுர்த்திபிறகு பஞ்சமி திதி.

இன்று ருது சாந்தி, பூமுடித்தல், சீமந்தம், பெயர் சூட்டடல், முடிவாங்க, கலைகற்க, பசுவாங்க,விவசாயம், வாஸ்து சாந்தி, கரும்பு நட, விவாகம் நடத்த, குடி போக,உகந்த நாள்.

***சந்திராஷ்டமம்:*** அனுஷம், கேட்டை.

---

## வான்விளக்கில் உங்கள் படைப்பு

வான்விளக்கு மாத இதழ் தோரணமலையின் சிறப்பை பறைசாற்றும் வண்ணம் வெளிவருகிறது. வாசகர்கள் தோரணமலை இறைவனை வேண்டி நிறைவேறிய சம்பவங்களை இந்த வான்விளக்கு பத்திரிகையில் வெளியிட தயாராக உள்ளோம். எனவே இது தொடர்பான கருகத்தை 948646921 என்ற வாட்ஸ் அப்பில் ‘‘வான்விளக்கு கேட்டதும் கிடைத்ததும்’’ என்ற தலைப்பிட்டு தகவல் தாருங்கள். அல்லது தோரணமலை கோவிலில் உள்ள தகவல் நோட்டில் குறிப்பிடுங்கள். உங்கள் விலாசத்தோடு கைபேசி எண் கண்டிப்பாக குறிப்பிடுங்கள்.

–ஆசிரியர், வான்விளக்கு

# பாவத்தை போக்கிய ஏகாதசி விரதம்



பிரம்மாவுக்கு ஐந்து தலை இருந்தது. இதனால் பார்வதி தேவி பிரம்மாவை தன் கணவர் என்று கருதி அவருக்கு பாதபூஜை செய்தாள். அதன்பின்னரே அது பிரம்மா என்று அறிந்தார். இதனை அறிந்த சிவபெருமான் பிரம்மாவுக்கு ஐந்து தலை இருப்பதால்தானே பிரச்சினை என்று கருதி அவரது ஒரு தலையை கொய்துவிட்டார்.

அந்த தலை சிவபெருமானின் திருவோடாக கையில் ஒட்டிக் கொண்டது. அந்த திருவோட்டில் என்னபோட்டாலும் மாயமானது. அந்த திருவோடு என்று நிறைகிறதோ



அப்போதுதான் திருவோடு கையை விட்டு அகலும் என்பது சாபம். இதனால் அவதியுற்ற சிவபெருமான் வீடு வீடாக சென்று பிச்சை எடுத்தார். இறுதியில் அன்னை சக்தி அன்னபூரணியாக வந்து பிச்சையிட திருவோடு அகன்றது.

இருந்தாலும் பிரம்மாவின் தலையை கொய்த பாவம் சிவபெருமானை விட்டு அகலவில்லை.

இதற்காக அவர் வரூதினி ஏகாதசி அன்று விரதம் இருந்து மகாவிஷ்ணுவை வழிபட்டார். அதன்பின் பாவம் விலகியது. இந்த வரூதினி ஏகாதசியானது சித்திரை மாதம் அமாவாசைக்குப்பிறகு வரும் ஏகாதசிதான். அது இந்த ஆண்டு 2–6 –2024 அன்று (வைகாசி 20–ந் தேதி) ஞாயிற்றுக்கிழமை வருகிறது. இந்த நாளில் நாமும் விரதம் இருந்து பெருமாளை வழிபட்டால் பெருமாள் பல்வேறு பிரச்சினைகளில் இருந்து நம்மை காப்பார்.

தோரணமலையில் சிவபெருமான் சுதை வடிவில் அருள்பாலிக்கிறார். அவரை வழிபட்டால் தெரியாமல் செய்த பாவம் கூட விலகும்.

## துன்பங்களை அழிக்கும் விரதம்



*சித்திரை மாதம் அமாவாசைக்கு பிறகு வரும் வளர்பிறை ஏகாதசியை மோகினி ஏகாதசி என்று அழைப்பர். இந்த நாளில் விரதம் இருந்து பெருமாளை வழிபட்டால் மோகமும், மோகத்தால் ஏற்படும் பாவங்களையும் போக்கும். மேலும் நம்மை அண்டியுள்ள துன்பங்களை எல்லாம் அழிக்கும் வல்லமை இந்த விரதத்திற்கு உண்டு. இந்த விரதத்தின் மகிமையை வசிட்ட முனிவர் ராமருக்கு எடுத்துரைத்தார். இந்த சிறப்புக்குரிய நாள் இந்த மே மாதம் 19–ந் தேதி அதாவது வைகாசி 6–ந் தேதி வருகிறது.*

## தோஷங்களை போக்கும் வழிபாடு



*கையில் கலப்பையுடன் அருள்பாலிக்கும் பரசுராமர் மகாவிஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்று. தந்தையின் கட்டளைபடி தாயை கொன்று பின்னர் தாயை உயிர்பித்தவர். சித்திரை மாதம் அமாவாசைக்கு பிறகு வரும் துவாதசி திதி அன்று அதாவது 20–5–2024(திங்கட்கிழமை) அன்று பரசுராமரை வழிபட உகந்த நாள். அன்றை தினம் பெருமாள் கோவிலுக்குச் சென்று 12 நெய் விளக்குகள் ஏற்றி வழிபட்டால் பல்வேறு நன்மைகள் கிடைக்கும். மேலும் தோஷங்கள் விலகும். தோரணமலை பக்தர்கள் கிருஷ்ணர் சிலையை வணங்கலாம்.*

# அறியாமல் செய்த பாவம் விலக புனித நீராடல்



சித்திரை மாதம் அமாவாசைக்கு பிறகு வரும் பிரதமை திதி நாளில்தான் வைசாக மாதம் பிறக்கிறது. இந்த மாதம் முழுவதும் புனித நீராட உகந்த நாள். அதாவது மே 9–ந்தேதி முதல் ஜூன் 7–ந் தேதி வரை ஆதாவது சித்திரை 26–ந் தேதி முதல் வைகாசி 25–ந் தேதி வரை வைசாக மாதம் ஆகும். இந்த நாள்களில் கடல், நதி, குளம் போன்ற புண்ணி தீர்த்தங்களில் தினமும் நீராடுவது சிறப்பு. மாதம் முழுவதும் நீராட முடியாவிட்டால் அவரவர்கள் பிறந்த நட்சத்திர நாளிலாவது புண்ணிய தீர்த்தங்களில் நீராட வேண்டும். சிலருக்கு நட்சத்திரம் தெரியாமல் இருக்கலாம். அவர்கள் பவுர்ணமி நாளில் (23.5.2024) நீராட வேண்டும்.

இந்த மாதம் புண்ணிய தீர்த்தங்களில் நீராடினால் நம்மை அண்டி இருக்கும் எல்லா தோஷங்களும் விலகும். நம்மையும் அறியாமல் செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கும். புண்ணிய தீர்த்த நீராடலுக்கு இந்த மாதம் மிகச் சிறப்பானது ஆகும்.


## பல்சுவை தகவல்களுக்கு
## செய்தி சாரல்

***செய்தி, செய்தி விமர்சனம், கதை, கட்டுரை, கவிதை, ஆன்மிக தகவல்கள் போன்றவற்றை இலவசமாக செய்தி சாரல் இணைய தளத்தில் காணலாம்.***

***இணைய தள முகவரி***

www.seithisaral.in

**அறிவார்ந்த தகவல்களும் பொழுது போக்கு அம்சமும் நிறைந்தது இந்த செய்தி சாரல்.**

## திங்கள் கிழமையும் அரிசி தானமும்

சந்திர பலம் வேண்டுபவர்கள் சந்திர பகவானின் அருளைப் பெற திங்கட்கிழமை அன்று விரதம் இருப்பது நல்லது. அன்றைய தினம் தெற்கு நோக்கிய அம்பிகையை வழிபட்டு ஒரு சிலருக்காவது அரிசி தானம் செய்யலாம்.


## வான்விளக்கில் உங்கள் விளம்பரம்

வான்விளக்கு மாத இதழில் விளம்பரம் கொடுத்து பயன்பெறுங்கள். விவரங்களுக்கு 96983 25325, 9442884831 என்ற எண்களுடன் தொடர்பு கொள்ளலாம்.
–நிர்வாகி, வான்விளக்கு

## வான்விளக்கு இதழ் வேண்டுமா?

வான்விளக்கு இதழ் வாங்க நினைப்பவர்கள் சந்தா தொகை ரூ.300/ ஐ வங்கி 9486469412 (பாலன்) என்ற கூகுள் எண்ணுக்கு அனுப்பி வைக்கவும். உங்கள் முகவரியை செல் நம்பரோடு தவறால் எங்கள் வாட்ஸ்அப்பில் அனுப்பி வையுங்கள்


## இம்மாத முக்கிய விசேஷங்கள்

1–5–2024 குருப்பெயர்ச்சி, நடராஜர் அபிஷேகம்
3–5–2024 குரு அஸ்தமனம்
4–5–2024 சர்வ ஏகாதசி, அக்னி நட்சத்திரம் ஆரம்பம்.
5–5–2024 பிரதோஷம்
6–5–2024 மாத சிவராத்திரி, மட்ச ஜெயந்தி, சுக்கிர அஸ்தமனம்
7–5–2024 சர்வ அமாவாசை
8–5–2034 கிருத்திகை
9–5–2024 சந்திர தரிசனம். கிருத்திகை விரதம்.
10–5–2024 அட்சய திருதியை, பலராமர் ஜெயந்தி
11–5–2024 சதுர்த்தி
12–5–2024 ராமானுஜர் ஜெயந்தி
13–5–2024 சஷ்டி
19–5–2024 சர்வ ஏகாதசி
20–5–2024 சோம பிரதோஷம்
22–5–2024 பவுர்ணமி, வைகாசி விசாகம், நரசிம்ம ஜெயந்தி.
26–5–2024 சங்கடஹர சதுர்த்தி
27–5–2024 சதுர்த்தி விரதம்
28–5–2024 அக்னிநட்சத்திரம் முடிவு, சிரவண விரதம்.
29–5–2024 சஷ்டி விரதம், கரிநாள்


Owned & Published by A.Ponnu Samy,No.52, Basha Street, Chennai-94.
Printed by R.Subramaniam, Shree Skandha Offset Printers, aminjikari, Chennai-29. Editor: A.Balan. R Dis. No. 1870 / 2002.